




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 234 06.04.2026 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 234 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(6-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-23
பிறை: தேய்பிறை
திதி
சதுர்த்தி நண்பகல் 1.48 வரை பிறகு பஞ்சமி.
நட்சத்திரம்:
அனுஷம் பின்னிரவு 2.21 வரை பிறகு கேட்டை
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 7.30-9.00 மணி
எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 3-4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | களிப்பு |
| ரிஷபம் | இன்சொல் |
| மிதுனம் | புகழ் |
| கடகம் | ஆதரவு |
| சிம்மம் | கவனம் |
| கன்னி | கடமை |
| துலாம் | பக்தி |
| விருச்சிகம் | ஆர்வம் |
| தனுசு | ஜெயம் |
| மகரம் | உதவி |
| கும்பம் | தாமதம் |
| மீனம் | பணிவு |

# காமராஜருக்கு மகனைப் போன்று இறுதிச் சடங்குகளை செய்தவர் கலைஞர்

## முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, ஏப்.6:**

விருதுநகர் சத்திரரெட்டியபட்டியில் திமுக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது:

* சங்கி கூட்டங்களை போல வாட்ஸ் அப் வதந்திகளை வாந்தி எடுக்கிறார் இபிஎஸ்.

* அடுத்தடுத்த பொய்களை கூச்சமே இல்லாமல் பேசுகிறார்.

* மறைந்த காமராஜருக்கு கலைஞர் மெரினாவில் இடம் கொடுக்க மறுத்ததாக இபிஎஸ் பொய் பிரசாரம் செய்கிறார்.

*காமராஜர் உடல் அடக்கம் செய்யும் இடத்தை தேர்வு செய்தவரே கலைஞர் கருணாநிதி தான்.

* காமராஜரின் உடலை முப்படைகளிடம் இருந்து பெற்று பீரங்கி வண்டி மீது ஏற்றியவர் கலைஞர் கருணாநிதி.

* பெருந்தலைவர் காமராஜருக்கு மகனைப் போன்று இறுதிச் சடங்குகளை செய்தார் கலைஞர் கருணாநிதி.

இவ்வாறு அவர் கூறினார்.

### படத்தில் விஜயகாந்துக்கு வாக்கு கேட்டேன்.. இன்று அவரது மகனுக்கு ஓட்டு கேட்டு வந்துள்ளேன்

விருதுநகர் சத்திரரெட்டியபட்டியில் திமுக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது:

* விருதுநகர் என்றால் பெருந்தலைவர் காமராசர் தான் நம் நினைவுக்கு வருவார்.

*சென்று வந்த அனைத்து தொகுதியிலும் திராவிட மாடல் 2.0-க்கு மக்கள் டபுள் ஓகே சொல்லிவிட்டனர்.

* அமைச்சர் தங்கம் தென்னரசுவை எதிர்த்து போட்டியிட எதிர்க்கட்சி வேட்பாளர் தயாரில்லை என தகவல்.


* விருதுநகரில் போட்டியிடும் தேமுதிகவின் விஜயபிரபாகரனுக்கு முரசு சின்னத்தில் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

*அருமை நண்பர் விஜயகாந்த் படத்தில் ஒரு பாடலுக்கு நடித்தது ஞாபகம் வருகிறது.

*படத்தில் விஜயகாந்துக்காக வாக்கு கேட்டேன். இன்று அவரது மகனுக்காக ஓட்டு கேட்கிறேன்.

*மக்கள் ஆணையிட்டால் படத்தில் விஜயகாந்திற்கு ஓட்டு கேட்டு நடித்தேன். இன்று அவரது மகனுக்கு வாக்கு கேட்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.



# தி.மு.க. கூட்டணி கட்சி சுயமாக முடிவு எடுக்க முடியவில்லை - இ.பி.எஸ்.


**விழுப்புரம், ஏப்.6:**

விழுப்புரம் மாவட்டத்தில் போட்டியிடும் அ.தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வலியுறுத்தி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விழுப்புரத்தில் நேற்று இரவு பிரசாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது:-

தமிழகத்துக்கும், டெல்லிக்கும் இடையே நடக்கும் தேர்தல் என முதலமைச்சர் ஸ்டாலின் மக்களை குழப்புகிறார். நடைபெற உள்ளது சட்டப்பேரவைத்தேர்தல், மக்களவைத்தேர்தல் அல்ல. தி.மு.க. கூட்டணி அடிமை கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி வலிமையான கூட்டணி. ஒரே கொள்கை உள்ள கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளதாக ஸ்டாலின் கூறுகிறார். தி.மு.க., காங்கிரஸ், வி.சி.க., இடதுசாரிக்களுக்கு ஒரே கொள்கையா? மக்களை ஏமாற்ற நாடகத்தை அரங்கேற்றுகிறார். முரண்பாடாக முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா பேசியதாக வெளியான ஆடியோவால் ஸ்டாலினுக்கு இரு நாட்களாக தூக்கம் தொலைந்து விட்டது. அதிர்ந்து போயிருக்கிறார்.

உடல்நலகுறைவாக இருந்தபோது முன்னாள் முதல்வர் கருணாநிதி, வீட்டு சிறையில் அடைக்கப்பட்டதாக சொல்லி இருக்கிறார். அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், முறையான விசாரணை நடத்தி தவறு செய்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இதனை தெரிவித்தால், என் மீது எறிந்து விழுகிறார். ஆ.ராசாவை கண்டிக்க பயம். அவரை கண்டித்தால் பல உண்மைகள், பல ஆடியோ வெளிவரும் என அஞ்சுகிறார்.



கமிஷன், கொள்ளை, பாலியல் சீண்டலில் முதன்மை மாநிலமாக தமிழகம் உள்ளது. ஊழலுக்காக கலைக்கப்பட்ட ஒரே ஆட்சி, தி.மு.க. ஆட்சிதான். செம்மண் குவாரி வழக்கில் இருந்து தி.மு.க. முன்னாள் அமைச்சர் பொன்முடி விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆட்சியர்கள் முதல் அரசு அதிகாரிகள் வரை பிறழ்சாட்சி, ஆவணங்களை சமர்பிக்காதது போன்ற காரணத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் விசாரணை நடத்தப்படும். தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். கட்டணமில்லா பஸ் என ஸ்டாலின் கூறும்போது, ஓசி பஸ் என பொன்முடி கூறினார். அரசாங்க பணத்தில் கட்டணம் இல்லாமல் மக்கள் பயணிக்கின்றனர். உங்கள் அப்பா வீட்டு பணம் இல்லை. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், ஆண்களும் கட்டணமில்லாமல் அரசு பஸ்சில் பயணிக்கலாம். கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களுக்கு தலா ரூ.10 லட்சத்தை கொடுத்த மோசமாக ஆட்சிதான் இது.

காட்டுமன்னார் கோவிலில் வி.சி.க. தலைவர் திருமாவளவன் போட்டியிடுவதாக அறிவித்திருந்தார். இப்போது தி.மு.க. கொடுத்த அழுத்தம் காரணமாக, பின்வாங்கி இருக்கிறார். தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துள்ள கட்சிகளால், சுயமாக முடிவு எடுக்க முடியவில்லை. அவர்கள் வெந்து புழுங்கிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழகத்தில் கஞ்சா போதையால், குற்றச்செயல் அதிகரித்துள்ளது. சிறுமி முதல் மூதாட்டிகளுக்கு பாதுகாப்பு இல்லை. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், 3 மாதத்தில் கஞ்சா விற்பனையை அறவே ஒழிப்போம். இவ்வாறு அவர் பேசினார்.

## தமிழகத்தில் வேட்புமனு தாக்கலுக்கு இன்று கடைசி: இதுவரை 3,413 மனுக்கள் சமர்ப்பிப்பு!

**சென்னை, ஏப்.6:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு, இதுவரை 3,413 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு இன்னும் ஒரே நாள் மட்டுமே எஞ்சியிருக்கும் நிலையில் சனிக்கிழமை மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

தமிழகத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் ஏப்.23-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் திமுக, அதிமுக, தவெக, நாம் தமிழர் என நான்கு முனைப் போட்டி நிலவுகிறது. அனைத்துக் கட்சிகளும் தங்களது வேட்பாளர்களை அறிவித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன. கடந்த மார்ச் 30-ஆம் தேதி தொடங்கிய வேட்பு மனு தாக்கல் திங்கள்கிழமையுடன் (ஏப்.6) முடிவடையவுள்ளது.

இன்னும் ஒருநாள் மட்டுமே அவகாசம் இருப்பதால் சனிக்கிழமை முக்கிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள், சுயேச்சை என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். குறிப்பாக அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ், அர.சக்கரபாணி, டிஆர்பி. ராஜா, சா.மு.நாசர், முன்னாள் அமைச்சர்கள் கடம்பூர் செ. ராஜூ, எஸ்.கோகுல இந்திரா உள்ளிட்டோர் தங்களது வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர். சனிக்கிழமை இரவு நிலவரப்படி மொத்தம் 3,413 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# விஜய்யின் பெரம்பூர் வேட்புமனுவில் மீண்டும் குழப்பம்!

## வேட்புமனு நிராகரிக்க வாய்ப்பு

**சென்னை, ஏப்.5:**

தவெக தலைவர் விஜய்யின் கூடுதல் பிரமாணப் பத்திரத்தில் அசையும் சொத்துகள் பட்டியலில் குளறுபடி ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் போட்டியிடுகிறார். இதனையடுத்து, பெரம்பூர் தொகுதியில் போட்டியிடுவதற்காக விஜய், மார்ச் 30 ஆம் தேதியில் வேட்புமனு தாக்கல் செய்தார்.

விஜய் தாக்கல் செய்த மனுவில் அவர் மீது எந்த வழக்கும் இல்லை எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், 2025-ல் விஜய் பதிவுசெய்யப்பட்ட வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளதை விஜய் வேட்புமனுவில் குறிப்பிடவில்லை.

இதனைத் தொடர்ந்து, மீண்டும் இரண்டாவது முறையாக சனிக்கிழமையில் பெரம்பூரில் விஜய் கூடுதல் பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்தார். இந்தக் கூடுதல் பிரமாணப் பத்திரத்தில், தன் மீதான வழக்கை விஜய் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், விஜய் பெரம்பூரில் முதலில் தாக்கல் செய்த வேட்புமனுவில் அசையும் சொத்துகளின் ரூ. 404 கோடி என்று குறிப்பிட்டிருந்ததாகவும், சனிக்கிழமையில் தாக்கல் செய்த கூடுதல் பிரமாணப் பத்திரத்தில், அசையும் சொத்துகளின் மதிப்பை ரூ. 410 கோடி என்றும் விஜய் குறிப்பிட்டிருப்பது மீண்டும் பேசுபொருளாகியுள்ளது.

தேர்தல் விதிமுறைகளின்படி, ஒரு வேட்பாளரின் பிரமாணப் பத்திரத்தில் தகவல்களை மறைப்பது அல்லது தவறான தகவல்களை அளிப்பது தண்டனைக்குரிய செயல் மட்டுமின்றி, அவரின் வேட்புமனு நிராகரிக்கப்படவும் வாய்ப்புள்ளது.


# டிரம்ப் 48 மணிநேரக் கெடு! வளைகுடா நாடுகள் தலையிட வேண்டும்

**புதுடில்லி, ஏப்.5:**

அமெரிக்கா-ஈரான் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளவும், ஹோர்முஸ் நீரிணையைத் திறக்கவும் ஈரானுக்கு டிரம்ப் 10 நாள்கள் அவகாசம் கொடுத்திருந்தார். அந்த அவகாசம் முடிவடையப்போகும் நிலையில், ஹோர்முஸ் நீரிணையை 48 மணிநேரத்தில் திறக்காவிட்டால் ஈரான் மீது நரகம் கட்டவிழ்த்து விடப்படும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்திருந்தார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்ட சர்வதேச அணுசக்தி முகமையின் (ஐஏஇஏ) முன்னாள் தலைமை இயக்குநர் முகமது எல்பரதேய், டிரம்ப்பின் இந்தப் பைத்தியக்காரத்தனத்தை நிறுத்த முடியாதா? என்ற கேள்வியை எழுப்பி,

"தயவுசெய்து, மீண்டும் ஒருமுறை, இந்த மனநோயாளி இப்பகுதியை முற்றிலுமாக



அழிப்பதற்குள், உங்களால் இயன்ற அனைத்தையும் செய்யுங்கள்" என அண்டை வளைகுடா நாடுகளை நோக்கித் தனது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலும், அதிகரித்து வரும் உலகளாவிய அரசியல் பதற்றங்கள் குறித்து ஆழ்ந்த வருத்தத்தையும் எல்பரதேய் பதிவுசெய்தார்.

# கேரளத்தில் பட்டாசு ஆலையில் வெடிவிபத்து- 2 பேர் பலி

**திருவனந்தபுரம்:**

கேரளம் மாநிலத்தில் விஷு பண்டிகை விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். இந்த ஆண்டு கொண்டாட்டத்தின்போது வெடிக்க பட்டாசு தயாரிக்கும் தொழிலில் பலரும் ஈடுபட்டுள்ளனர்.

கோழிக்கோட்டை அடுத்த செவாயூர் குரிக்கத்தூர் பகுதியில் ஒரு வீட்டில் சிலர் பட்டாசு தயாரித்து வந்தனர். அனுமதி பெறாமல் அவர்கள் இந்த தொழிலை செய்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று இரவு இந்த வீட்டில் வெடிவிபத்து ஏற்பட்டது.

இதில் அங்கு பணியில் இருந்த ராகுல் (வயது 26) மற்றும் அவரது மைத்துனரான மற்றொரு ராகுல் (27) ஆகியோர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர். மேலும் விஷ்ணு



(28) அவரது மனைவி சினி (27) மற்றும் ஹிஜித் (36) ஆகியோர் பலத்த காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




## எஸ்.கரிசல்குளம் கேட்ட வரம் தரும் முத்துமாரியம்மன் கோவில் அக்னிசட்டிவிழா



**மானாமதுரை, ஏப் 06:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மிளகனூர் ஊராட்சி அன்னவாசல் ரோட்டில் எஸ்.கரிசல்குளம் கிராமத்தில் பிரசித்தி பெற்றகேட்டவரம்தரும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் உள்ளது. இக் கோவில் வளாகத்தில் கோவில் நிறுவனர் ஸ்ரீ லெட்சுமண சுவாமி ஜீவசமாதி உள்ளது.இங்கு ஆண்டு பங்குனி தோறும் திருவிழா நடைபெறும் . கடந்த 29ந்தேதி பங்குனி 15ஞாயிறு அன்று மாலை காப்புகட்டுதலுடன் திருவிழா தொடங்கியது .

பங்குனி திருவிழா தொடங்குவதை முன்னிட்டு கேட்ட வரம் முத்துமாரியம்மன் கோவிலில் சிறப்பு கோபூஜை மற்றும் சிறப்பு கணபதி ஹோமம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து திருவிழா நடைபெறும் நாட்களில் திருவிளக்கு பூஜை, மாவிளக்கு வழிபாடு, பூச்சொரிதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. முக்கிய விழாவாக பக்தர்கள் அக்னி சட்டி விழா ஏப்ரல் 6 ந்தேதி திங்கட்கிழமை இன்று மாலை நடைபெறுகின்றது .

இதில் ஏராளமான பக்தர்கள் அக்கினி சட்டி, அழகு குத்தி சாமியாடி வந்து நேர்த்தி கடன் செலுத்துவார்கள். இரவு சிறப்பு அன்னதானம் நடைபெறுகிறது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் கேட்டவரம்தரும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் நிர்வாகி செர்டு பாண்டி செய்து வருகிறார்.

அன்னதானம் செய்ய தொடர்புக்கு :9442000451

## விஸ்வாவசு பங்குனி பிரம்மோத்ஸவம்



திருநின்றவூர் ஸ்ரீ மத்ஸவித்ரி நாயிகா சமேத ஸ்ரீபக்தவத்சலப் பெருமாள் - விஸ்வாவசு பங்குனி பிரம்மோத்ஸவம் - 2026 இரண்டாம் திருநாள் காலை ஹம்ஸ வாகனம் புறப்பாடு

## மானாமதுரையில் திமுக வேட்பாளர் தமிழரசி தேர்தல் பணிமனை திறப்பு விழா






**மானாமதுரை, ஏப் 06:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தனி சட்ட மன்ற தொகுதிக்கு மீண்டும் திமுக சார்பில் தற்போது எம்எல்ஏ தமிழரசி போட்டியிடுகிறார் . தமிழரசி எம்எல்ஏ வேண்டுகோளை ஏற்று திமுக நாடாளுமன்ற மன்ற குழு தலைவர் கனிமொழி எம்பி இரண்டு நாட்களுக்கு முன்பு மானாமதுரை தொகுதியில் பிரச்சாரம் செய்தார்.

அதைத் தொடர்ந்து மானாமதுரை சுந்தர புரம் தெருவில் திமுக தேர்தல் பணிமனையை திமுக வேட்பாளர் தமிழரசி முன்னிலையில் அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் திறந்து வைத்தார். காங்கிரஸ் மூத்த தலைவர் ஏ ஆர் பி முருகேசன், இளையான்குடி முன்னாள் எம்எல்ஏ சுப.மதியரசன், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், மானாமதுரை நகராட்சி தலைவர் முன்னாள் எம்எல்ஏ மாரியப்பன் கென்னடி, கண்ணமங்கலம் கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் சுப தமிழரசன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## பணி ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியருக்கு பாராட்டு விழா





**புதுக்கோட்டை, ஏப்.06:** பணி ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியருக்கு பாராட்டு விழா கிராம பொதுமக்கள் ஆசிரியர்கள் நினைவு பரிசு வழங்கி வாழ்த்தினர்.

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு சந்திரசேகரன் அவர்கள் பணி ஓய்வு பெறுவதை முன்னிட்டு கிராம பொதுமக்கள் சார்பாகவும் ஆசிரியர்கள் சார்பாகவும் நினைவுப் பரிசு வழங்கி பணி நிறைவு பாராட்டு விழா நடத்தினர்.

## படத்தில் விஜயகாந்துக்கு வாக்கு கேட்டேன்.. இன்று அவரது மகனுக்கு ஓட்டு கேட்டு வந்துள்ளேன் - மு.க.ஸ்டாலின்





**விருதுநகர், ஏப்.06:** விருதுநகர் சத்திரரெட்டிய பட்டியில் திமுக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது:

* விருதுநகர் என்றால் பெருந்தலைவர் காமராசர் தான் நம் நினைவுக்கு வருவார்.

* சென்று வந்த அனைத்து தொகுதியிலும் திராவிட மாடல் 2.0-க்கு மக்கள் டபுள் ஓகே சொல்லிவிட்டனர்.

* அமைச்சர் தங்கம் தென்னரசுவை எதிர்த்து போட்டியிட எதிர்க்கட்சி வேட்பாளர் தயாரில்லை என தகவல்.

* விருதுநகரில் போட்டியிடும் தேமுதிகவின் விஜயபிரபாகரனுக்கு முரசு சின்னத்தில் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

* அருமை நண்பர் விஜயகாந்த் படத்தில் ஒரு பாடலுக்கு நடித்தது ஞாபகம் வருகிறது.

* படத்தில் விஜயகாந்துக்காக வாக்கு கேட்டேன். இன்று அவரது மகனுக்காக ஓட்டு கேட்கிறேன்.

* மக்கள் ஆணையிட்டால் படத்தில் விஜயகாந்திற்கு ஓட்டு கேட்டு நடித்தேன். இன்று அவரது மகனுக்கு வாக்கு கேட்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## "ராஜ்யசபா எம்.பி. சீட் தருவதாக இபிஎஸ் உறுதியளித்தார்"

### கடிதத்தை காட்டி பிரேமலதா ஆவேசம்



**திருவண்ணாமலை,ஏப்.06:** ராஜ்யசபா எம்.பி சீட் தருவதாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கையெழுத்துப் போட்டுக்கொடுத்த கடிதத்தை, தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா ஊடகங்களிடம் காண்பித்தார்.

திருவண்ணாமலையில் செய்தியாளர்களிடம் பேசிய பிரேமலதா, "எடப்பாடி பழனிசாமி எங்களைப் பார்த்து அரை பர்சன்ட் ஓட்டு என்கிறார். உங்களுக்கு ஏன் வயிறு எரிகிறது. உங்கள் கூட தானே 2011 முதல் 2026 வரை இருந்தோம். முதல்வர் வேட்பாளராக இருந்துகொண்டு அவர் இவ்வாறு பேசுவது அழகல்ல.

தேமுதிகவுக்கு மாநிலங் களவை எம்.பி பதவி தருவதாக எடப்பாடி பழனிசாமி கையெழுத்து போட்டதை முதன்முறையாக இப்போது அண்ணாமலையார் கோயிலில் உங்களுக்கு காட்டுகிறேன். நான் எங்கே கையெழுத்து போட்டுக் கொடுத்தேன் என்று பழனிசாமி கேட்டார். அரசியலில் கண்ணியத்தை கடைபிடித்து நான் இதுவரை இந்தக் கடிதத்தை வெளிக்காட்டாமல் இருந்தேன். இப்படி வெளிக்காட்டும் சூழ்நிலைக்கு அவர்தான் கொண்டுசென்றார்.

2024ல் தேமுதிகவுக்கு 5 மக்களவை எம்.பி தொகுதிகளும், ஒரு மாநிலங்களவை எம். பி பதவியும் வழங்கப்படும் என்று அவர் கையெழுத்துப் போட்டு கொடுத்தார், நானும் கையெழுத்து போட்டேன். எந்த ஆண்டு ராஜ்யசபா எம். பி பதவி கொடுக்கப்படும் என வருடத்தை போட்டு தருமாறு அவரிடம் அப்போதே சொன்னேன்.

எம்ஜிஆர் காலம் முதல் இப்படி கொடுப்பதே வழக்கம் என்று சொல்லிவிட்டு, என் வார்த்தைதான் முக்கியம் என்று அவர் சொன்னார். அவரின் வார்த்தையை நாங்கள் நம்பினோம். ஆனால் நம்பிக்கைக்கு புறம்பாக அவர் 2025ல் எங்களுக்கு ராஜ்யசபா கொடுக்காமல் ஏமாற்றினார்.

எங்கள் கட்சியை 'ஐசியுவில் இருந்த கட்சி' என்கிறார் பழனிசாமி. அவர் இவ்வாறு பேசுவது தவறு. அண்ணா சொன்னபடி நாங்கள் கண்ணியத்தை கடைபிடிக்கிறோம்.

ஆனால், அதிமுகவில் உள்ள முன்னாள் அமைச்சர்கள் மற்றும் தொண்டர்கள், நாங்கள் கூட்டணியிலிருந்து வெளியேறியதை ஏற்றுக்கொள்ள வில்லை. பழனிசாமி செய்தது தவறு என்பதை அதிமுகவினர் சுட்டிக்காட்டி வருகின்றனர். அவரின் பேச்சுக்கெல்லாம் மே4-ம் தேதி மக்கள் பதில் சொல்வார்கள்" என்றார்

## "ஆயிரம் அமித் ஷா, பழனிசாமி சேர்ந்தாலும் ஸ்டாலினின் நல்லாட்சியை தடுக்க முடியாது" - செல்வப்பெருந்தகை திட்டவட்டம்



**சென்னை, ஏப்.06:** ஆயிரம் அமித் ஷாக்கள், பழனிசாமிகள் சேர்ந்தாலும் ஸ்டாலினின் நல்லாட்சியை தடுத்து நிறுத்த முடியாது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலின் போது பாஜகவுடன் கூட்டணி வைத்த பழனிசாமி, 2024 மக்களவைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டார். அப்போது, அவரை ஊழல் பேர்வழி என அண்ணாமலை விமர்சித்தார். இன்று மீண்டும் அதே பாஜகவிடம் பழனிசாமி சரணடைந்துள்ளார். 2018-ல் தூத்துக்குடியில் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டபோது. டிவி பார்த்து தெரிந்து கொண்டேன்' என்றார்.

ரத்தக் கறை படிந்த அந்த வரலாற்றை தமிழக மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். ஊழல் பற்றி பழனிசாமி பேசுவது, சாத்தான் வேதம் ஓதுவதைப் போன்றது. தமிழகத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று அவர் கூறுவது ஐமுக்காளத்தில் வடிகட்டிய பொய். நாட்டிலேயே தமிழகத்தில் தான் அதிக பெண்கள் வேலைக்குச் செல்கின்றனர்.

பொள்ளாச்சி பாலியல் புகார்: பொள்ளாச்சி பாலியல் புகார் முதல் நிர்மலா தேவி விவகாரம் வரை அதிமுக ஆட்சியில் நடந்த அவலங்களை மூடி மறைக்க முடியாது. திமுக ஆட்சியில் குற்றவாளிகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதை தேசியக் குற்ற ஆவணக் காப்பக புள்ளி விவரங்கள் உறுதி செய்கின்றன. சசிகலாவின் காலில் விழுந்து முதல்வர் பதவியைப் பெற்ற பழனிசாமிக்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர் ஸ்டாலினை விமர்சிக்க தகுதி இல்லை.

திமுக அரசு அளித்த 505 வாக்குறுதிகளில் 405-ஐ நிறைவேற்றி சாதனை படைத்துள்ளது. பொருளாதாரத்தில் மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக தமிழகத்தை 2-ம் இடத்துக்கு உயர்த்திய ஸ்டாலினின் நல்லாட்சியை, ஆயிரம் அமித்ஷாக்கள். பழனிசாமிகள் சேர்ந்தாலும் தடுத்து நிறுத்த முடியாது. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியே 2026 தேர்தலிலும் மாபெரும் வெற்றி பெறும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஆதி கேசவப் பெருமாள் சேஷ வாகன சேவை



மயிலை ஆதி கேசவப் பெருமாள் சேஷ வாகன சேவை

## மானாமதுரையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி







**மானாமதுரை, ஏப் 06:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி தேர்தலை முன்னிட்டு மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனம் பகுதியில் உள்ள மாற்று திறனாளிகள் மறுவாழ்வு விழுதுகள் சேவை மையம் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மானாமதுரை வட்டாட்சியர் தொகுதி தேர்தல் அலுவலர் கிருஷ்ணகுமார் தொடங்கி வைத்தார்.

இதில் சைகை மொழியில் வாக்காளர் உறுதிமொழி மாற்றுத்திறனாளிகள் முதல் தலைமுறை வாக்காளர்களை கௌரவித்தல், தேர்தல் விழிப்புணர்வு கோலாட்டம், பாட்டு, நாட்டியம். மாற்றுத்திறனாளிகள் மூன்று சக்கர வாகன தேர்தல் விழிப்புணர்வு பேரணி, தேர்தல் விழிப்புணர்வு வாகனத்தில் கையெழுத்து பிரச்சாரம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது .

## இடைக் காட்டூர் திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் சிலுவை வழிபாடு





**மானாமதுரை, ஏப் 06:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள இடைக்காட்டூரில் 148 ஆண்டுகள் புகழ் பெற்ற திரு இருதய ஆண்டவர் திருத்தலம் உள்ளது. இங்கு ஆங்கில மாதத்தின் முதல் வெள்ளி கிழமை சிறப்பு கூட்டு பிரார்த்தனை திருப்பலி நடைபெறும்.

இதில் தமிழகம் மற்றும் கேரளா பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்வார்கள். புனித வெள்ளியை முன்னிட்டு தவ கால சிலுவை வழிபாடு திருச்சி தூய ஜோசப் கல்லூரி உதவி பேராசிரியர் ராஜசேகரன், மதுரை தூய மரியன்னை பள்ளி தலைமை ஆசிரியர் சைமன் ஜான் கென்னடி தலைமையில் கிறிஸ்த வர்கள் சிலுவையுடன் இடைக்காட்டூரில் உள்ள முக்கிய வீதிகளின் வழியே ஊர்வலமாக எடுத்து வந்தனர்.

தொடர்ந்து திருத்தல வளாகத்தில் திருத்தல அதிபர் ஜான் வசந்தகுமார் தலை மையில் நடந்த திருப்பலி யில் மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தேனி, திண் டுக்கல் உள்ளிட்ட பல் வேறு மாவட்டங்களில் இருந்து வந்த கிறிஸ்தவர் கள் வழிபாடு நடத்தினர்.

WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106



















WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யு, வி.பி.ஜி அவின்யு, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97























WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெவ்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift
7540003588




WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



## கவிதை அரங்கம்!



இரவை
பல வண்ணங்கள்
அழகாக்கி
கொண்டிருந்தாலும்
உன்னை காணும்வரை
என்மனம் இருளே

கரு மையும்
கவிதையாகும்
உன் கண்கள்
ரசித்தால்...!

பேச வந்த
வார்த்தையெல்லாம்
ஓசையின்றி போனது
உன் விழிமொழியில்
மயங்கி...!

என்னில் நீயாகி
உன்னில் நானாகி
நம்முள் நாமானோம்

## வாழ்க்கை தத்துவம்...



உறவுகள் தூக்கி
எறிந்தால் வருந்தாதே
அவர்கள் முன்
வாழ்ந்து காட்டு
மகிழ்ச்சியாக நிம்மதியாக

எதையும் பொறுமையோடு தேடு
பொறாமையோடு தேடாதே

அதிகம் அன்போடு
நடந்து கொள்ளாதே
அடிமையாக்கி விடுவார்கள்

அழுகையும் சரி
சோகமும் சரி
உன்னை
ஏமாற்றியவர்களுக்காக
சிந்தாதே

அன்பானவர்களுக்காக
இறங்கி போவதும் தவறில்லை
நம் அன்பு புரியாதவர்களிடம்
விலகி போவதும் தவறில்லை

## "குழந்தையின் ஓவியம்"



பல ஆண்டு முயற்சிக்குப் பின் இப்போதுதான் வாடகை வீட்டிலிருந்து வெளியேறி சொந்த வீடு வாங்கி அதில் குடியேறினான் அட்வகேட் தியாகு.

அளவான, ஆனந்தமான குடும்பம். மனைவி லதா, ஐந்து வயது மகன் கார்த்திக்.

ஒரு மாலை நேரம், கார்த்திக் காகிதத்தில் ஒரு மனிதரின் படத்தை வரைந்து கொண்டிருந்தான்.

அம்மா லதா அதைப் பார்த்து சிரித்தாள். "யாருடா இது?"

கார்த்திக் சாதாரணமாக சொன்னான்.
"இவர்தான் ராத்திரி நேரத்துல நம்ம வீட்டுக்குள்ளார வாக்கிங் போற அங்கிள்."

லதா சிரித்தாள். " போடா லூசு"

ஆனால் அடுத்த நாளும் கார்த்திக் அதே மனிதரைப் படம் வரைந்தான்.

மூன்றாம் நாள்...
நான்காம் நாள்...

ஒவ்வொரு நாளும் கார்த்திக் வரையும் படத்தில் அதே முகம். அதே மனிதர்.

லதாவுக்கு லேசாய் பயம் ஆரம்பித்தது.

ஒரு நாள் கார்த்திக்கிடம் கேட்டாள். "இந்த அங்கிள் உன்னிடம் பேசுவாரா?"

கார்த்திக் தலையாட்டினான். "நல்லாப் பேசுவார்... என்னோட நண்பர்."

"எப்போ வருவார்?"

"நீங்கெல்லாம் தூங்கிய பிறகு."

லதாவின் இதயம் அதிர்ந்தது.

"அவர் எப்படி இருப்பார்?"

"நான் வரைந்த மாதிரி தான் இருப்பார்"

லதாவின் கைகள் நடுங்கின.

அடுத்த நாள் கார்த்திக்கின் டிராயிங்கைப் பார்த்தாள். அதே மனிதன்.

கார்த்திக் சொன்னான். "அம்மா... இன்னிக்கு ராத்திரி இவர் வருவார்... வந்து அப்பாகிட்டப் பேசுவார்"

லதா நடுங்கியபடி கேட்டாள். "எதுக்கு?'

கார்த்திக் சிரித்துக் கொண்டு சொன்னான்."அப்பா வக்கீல்தானே?... ஒரு கேஸ் குடுக்கணுமாம்... அவரை யாரோ கொன்னுட்டாங்களாம்... அவங்க மேலே கேஸ் போடணுமாம்"

அன்றிரவே தியாகுவிடம் லதா விஷயத்தைச் சொல்ல, அடுத்த வாரத்திலேயே வேறு வாடகை வீட்டிற்கு குடி போனான் தியாகு.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, கார்த்திக் வரைந்த படத்தில் அதே ஆள்.

(முற்றும்)



முகில் தினகரன்
கோயமுத்தூர்.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*நோயாளி:* டாக்டர், எனக்கு ஒரு விசித்திரமான நோய் வந்திருக்கு. யாராவது என்கிட்ட பேசினா, அவங்க பேசுறது எனக்குக் கேக்கவே மாட்டேங்குது.

*டாக்டர்:* இது எப்படிய்யா நடக்கும்? சரி, இது எப்போ இருந்து நடக்குது?

*நோயாளி:* என்னது டாக்டர் சொன்னீங்க? எனக்குக் கேக்கல!



## தினம் ஒரு சமையல்



### தக்காளி சேவை

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1 பாக்கெட் | -தக்காளி சேவை |
| 1 மீடியம் சைஸ் | -பெரிய வெங்காயம் |
| 3 | -பச்சை மிளகாய் |
| 1 மீடியம் சைஸ் | -தக்காளி |

தாளிக்க

| | |
|---|---|
| 1 டேபிள் ஸ்பூன் | -எண்ணெய் |
| 1 ஸ்பூன் | -கடுகு |
| 1 ஸ்பூன் | -உளுத்தம் பருப்பு |
| 1 ஸ்பூன் | -கடலைப்பருப்பு |
| சிறிதளவு | -கருவேப்பிலை கொத்தமல்லி |
| தேவையான அளவு | -தூள் உப்பு |



செய்முறை:

ஒரு பாக்கெட் தக்காளி சேவையை பிரித்து எடுத்துக் கொள்ளவும். அதை ஒருமுறை தண்ணீரில் நன்கு கழுவி விட்டு மீண்டும் உப்பு சேர்த்த தண்ணீரில் மிதக்கும் அளவுக்கு பத்து நிமிடம் வரை ஊற வைக்கவும். ஒரு பெரிய வெங்காயத்தை பொடியாக அரிந்து கொள்ளவும்.அதேபோல் தக்காளி பச்சை மிளகாயை பொடியாக அரிந்து கொள்ளவும். தாளிக்க தேவையான எண்ணெய் கடுகு உளுத்தம் பருப்பு கடலைப்பருப்பு இவற்றை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

பத்து நிமிடம் உப்பு தண்ணீரில் ஊறிய சேவையை தண்ணீர் நன்றாக வடித்து தனியாக எடுத்துக் கொள்ளவும். இட்லி பானை வைத்து அதில் தண்ணீர் ஊற்றி இட்லி தட்டை வைக்கவும். இட்லி தட்டில் துணி போட்டு அதன் மேல் தண்ணீர் வடித்த இந்த சேவையை பரவலாக வைக்கவும். இட்லி மூடி போட்டு மூடி பத்து நிமிடம் வரை வேக விடவும். வெந்த பிறகு தட்டை மட்டும் தனியாக எடுத்து கீழே வைத்து அதன் மேல் ஒரு ஸ்பூன் எண்ணெயை பரவலாக ஊற்றி விடவும். சிறிது ஆற வைத்து எடுத்தால் தனித்தனியாக சேவை உதிரியாக வரும்வரும்.

ஒரு வாணலியில் எண்ணெய் சேர்த்து அதில் கடுகு உளுத்தம் பருப்பு கடலைப்பருப்பு தாளிக்கவும் பிறகு பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய், வெங்காயம் மற்றும் தக்காளி சேர்த்து வதக்கவும். இப்போது சிறிதளவு உப்பு சேர்த்து வதக்கிக் கொள்ளவும். இவை நன்கு வதங்கிய பிறகு ஆறிய சேவையை இதில் கொட்டி கட்டி இல்லாமல் நன்குகிளரி விடவும் பிறகு கருவேப்பிலை கொத்தமல்லி சேர்த்து மீண்டும் ஒருமுறை கிளறி விடவும். சேவை நன்கு சூடு ஏறிய பிறகு அடுப்பை நிறுத்தி விடவும் சுவையான தக்காளி சேவை ரெடி.

## அகத்திக்கீரை பயன்கள்



63 வகை சத்துகளைக் கொண்ட, உடலை குளிர்வித்து, அகம் (உள்) தூய்மையாக்கும் மருத்துவக் குணம் மிக்கது. இது கண் பார்வை, செரிமானம், எலும்பு வலிமை, பித்தம் மற்றும் உடல் சூட்டைக் குறைத்து, நச்சுக்களை நீக்க உதவுகிறது. அகத்தி பூ மற்றும் இலைகள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, ரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துகிறது.

அகத்தியின் முக்கியப் பயன்கள்:

உடல் சூடு தணிப்பு: அகத்திக்கீரை உடல் சூடு மற்றும் பித்தத்தைக் குறைத்து, உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது.

செரிமானம் மற்றும் மலச்சிக்கல்: செரிமான மண்டலத்தை சீராக்கி, மலச்சிக்கல் மற்றும் வயிற்று உப்பசத்தைக் குறைக்கிறது.

கண் பார்வை மற்றும் எலும்பு ஆரோக்கியம்: இதில் உள்ள அதிகப்படியான வைட்டமின் A மற்றும் கால்சியம் கண் பார்வையை மேம்படுத்தி, எலும்பு, பற்களை வலிமையாக்குகிறது.

நச்சுக்களை நீக்குதல்: புகைப்பிடிப்பவர்களின் உடலில் உள்ள நிக்கோடின் நச்சுக்களை நீக்கி, நுரையீரல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது.

ஆயுர்வேத பயன்கள்: இலைகள் கபம் மற்றும் வாதத்தைக் குறைத்து, தலைவலி, சளி, மற்றும் காய்ச்சலுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

## பார்வதியுடன் சென்று புதிய கார் வாங்கியுள்ள பிக்பாஸ் புகழ் கம்ருதீன்... வீடியோவுடன் இதோ



விஜய் தொலைக்காட்சி ரசிகர்களால் அதிகம் கொண்டாடப்படும் ரியாலிட்டி நிகழ்ச்சிகளில் ஒன்று பிக்பாஸ் 9. கடைசியாக 9வது சீசன் பிரம்மாண்டத்தின் உச்சமாக ஒளிபரப்பாகி முடிந்தது.

விஜய் சேதுபதி தொகுத்து வழங்க சின்னத்திரை கலைஞர்கள் பலரும் கலந்துகொண்டனர். இதுவரை தமிழ் பிக்பாஸ் வரலாற்றில் நடக்காத விஷயங்கள் பலவும் இந்த சீசனில் நடந்தது, அதில் ஒன்று தான் இருவருக்கு கொடுக்கப்பட்ட ரெட் கார்ட்.

தகாத வார்த்தையில் பேசுவது, பெண்ணை மோசமாக பேசுவது என இருந்த விஜே பார்வதி மற்றும் கம்ருதீன் ரெட் கார்டு வாங்கி வெளியேறினார்கள்.

பிக்பாஸ் 9வது சீசன் டைட்டில் ஜெயித்த திவ்யா இப்போது வரை எந்த சீரியலும் கமிட்டாகவில்லை. ஆனால் போட்டோ ஷட், விளம்பரங்கள் என நடிக்கிறார்.

மக்களால் டைட்டில் வின்னராக பார்க்கப்பட்ட கானா வினோத் இப்போது குக் வித் கோமாளி 7 நிகழ்ச்சியில் தனது மனைவியுடன் போட்டியாளராக களமிறங்கியுள்ளார்.

ரெட் கார்டு வாங்கி வெளியே சென்ற பார்வதி இப்போது வெப் தொடரில் எல்லாம் நடித்துள்ளார்.

அதேபோல் கம்ருதீன் வாழ்க்கையில் இப்போது ஒரு ஸ்பெஷல் விஷயம் நடந்துள்ளது. அதாவது அவர் புதிய கார் ஒன்றை வாங்கியுள்ளார், பார்வதி மற்றும் தனது நண்பர்களுடன் சென்று கார் வாங்கும் போது எடுக்கப்பட்ட வீடியோவை பதிவிட்டுள்ளார்.



சினிமா

தாய்லாந்து சென்றுள்ள ஹரிப்ரியா, அங்கிருந்து எடுத்துக்கொண்ட அழகிய புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவிட்டுள்ளார். இதோ அந்த புகைப்படங்கள்:

## ரம்பாவின் மகன் நடிகர் விஜய்யின் தீவிர ரசிகரா? வெளிப்படையாக பேசிய நடிகை

இயக்குநர் சுந்தர்.சி இயக்கத்தில் வெளிவந்த உள்ளத்தை அள்ளித்தா படத்தின் மூலம் நடிகை ரம்பா தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானார்.

இதன்பின் செங்கோட்டை, அருணாச்சலம், காதலா காதலா, மின்சார கண்ணா, அன்புடன், ஆனந்தம், மிலிட்டரி, 3 ரோஸஸ் என பல திரைப்படங்களில் நடித்து வந்தார். தமிழ் மட்டுமின்றி மற்ற மொழி திரைப்படங்களிலும் பிஸியாக நடித்து வந்தார். ஆனால், திடீரென சினிமாவிலிருந்து விலகினார். இது அவருடைய ரசிகர்களுக்கு சற்று வருத்தத்தை கொடுத்தது.

இதுவரை உலகளவில் யூத் திரைப்படம் செய்துள்ள வசூல், எவ்வளவு தெரியுமா

சினிமாவில் இருந்து விலகியிருந்தாலும், சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் ரியாலிட்டி ஷோக்களில் நடுவராக பங்கேற்று வருகிறார். விஜய் டிவியில் ஒளிபரப்பாகி வரும் ஜோடி ஆர் யூ ரெடி நிகழ்ச்சியில் தற்போது நடுவராக ரம்பா இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

நடிகை ரம்பா பல முன்னணி நட்சத்திரங்களுடன் இணைந்து நடித்திருக்கிறார். அதில் விஜய்யுடன் இணைந்து மின்சார கனவு, நினைத்தேன் வந்தாய், என்றென்றும் காதல் ஆகிய படங்களில் நடித்துள்ளார். இந்த நிலையில், பேட்டி ஒன்றில் தனது மகன், நடிகர் விஜய்யின் மிகப்பெரிய ரசிகன் என பேசியுள்ளார்.

இதில், "என் மகன் 5 வருஷமா விஜய்யின் பெரிய ரசிகனா இருந்தான். நான் விஜய் கூட நடிச்சது அவனுக்கு தெரியாது. ஒரு தடவை என் கணவர் அவன்கிட்ட வந்து, 'டேய் உங்க அம்மா விஜய் கூட நடிச்சிருக்காங்க, உனக்கு தெரியுமா'ன்னு கேட்டாரு. உடனே அவன் அதிர்ச்சியாகிட்டான். அன்று முழுக்க என்கிட்டே கேட்டுக்கிட்டே இருந்தான், அதன்பின் ஒரு நாள் விஜய் சார்கிட்ட கேட்டுட்டு என் படங்களை கூட்டிக்கிட்டு போய் அவரை மீட் பண்ணுனேன்" என கூறியுள்ளார்.

# எமன் வழிபட்ட நவகிரகங்கள் இல்லாத சிவ ஆலயங்கள்

* நவக்கிரகங்கள் இல்லாத பிரசித்தி பெற்ற புராதன சிவன் கோயில்கள் உள்ளன. எங்கெல்லாம் எமன் சிவனை வழிபட்டுள்ளாரோ அங்கெல்லாம் நவகிரகங்கள் இருக்காது.

* திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலில் நவகிரகம் இல்லை ஏனென்றால் அங்கு எமன் வந்து வழிபட்ட தலம்.


* திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோயிலிலும் நவகிரக சந்நதி இல்லை. அங்கும் எமன் வந்து வழிபட்டதாக கூறப்படுகிறது.

* ஸ்ரீவாஞ்சியம் அங்கு எமனுக்கு முக்கியத்துவம். இங்கு எமன் சிவனை வழிபட்டதாக ஐதீகம்.

* நான்காவது ஸ்தலம் திருவாவடுதுறை. இங்கு எமன் சிவனை வழிபட்டதாக வரலாறுகள் உள்ளன.










* திருப்பைஞ்சீலி, வாழை மரத்தை தலவிருட்சமாகக் கொண்ட சிவஸ்தலம். திருச்சிக்கு அருகில் உள்ள இந்த தலத்திலும் நவகிரகங்கள் கிடையாது.

* திருக்கடையூரில் மானிடர்களின் உயிரை பறித்த எமனுக்கு சிவன் இங்கு மறுபடியும் உயிரை எடுக்கும் அதிகாரம் வழங்கிதாக ஐதீகம்

* காளஹஸ்தி ஆறாவது ஸ்தலம் . பஞ்சபூத தலங்களில் இது வாயு ஸ்தலம். அங்கு ஒன்பது படிகள் கொண்ட தங்கஏணியில் (golden ladder) ஒவ்வொன்றிலும் மூன்று மலர்கள் பொறிக்கப்பட்டிருக்கும். இந்த 3*9 என்பது 27 நட்சத்திரத்தை குறிக்கும். 27 நட்சத்திரங்களும் இந்த ஏணியில் ஆவாகனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஏணி சிவலிங்கத்தின்மீது சாய்த்து வைக்கப்பட்டிருக்கும். அதை தீபாராதனை காட்டும் போது மட்டும் தான் பார்க்க முடியும்.

* திருமழபாடி. திருவையாருக்கு அருகில் உள்ளது. அங்கும் நவகிரக சந்நிதி இல்லை.

* திருக்கடையூர் . இதன் தலபுராணம் வித்தியாசமானது. எமன் மார்க்கண்டேயனை நோக்கி பாசக்கயிறு வீசும் போது சிவன் காட்சி அளித்து என்னுடைய பக்தனை எப்படி நீ ஆட்கொள்ளலாம் என்று காலால் எட்டி உதைத்ததாகவும் அதனால் இறத்தல் தொழில் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் இந்த ஸ்தல புராணம் கூறுகிறது.

* ஒன்பதாவது ஸ்தலம் திருமழபாடி திருவையாறு அருகில் இருக்கிறது.

* பின் பத்தாவது ஸ்தலம் திருவெங்காடு. இங்கிருக்கும் நடராஜர் சிதம்பரத்தை விட பழமையானவர்.

* அடுத்து திருப்புரம்பியம் பதினோராவது ஸ்தலம். இங்கும் நவக்கிரகம் கிடையாது.

## தினம் ஒரு தலைவர்கள்

# சாவித்ரி தேவி முகர்ஜி வரலாறு

சாவித்ரி தேவி முகர்ஜி 1905 ஆம் ஆண்டு லியோனில் மாக்சிமியானி ஜூலியா போர்டாஸ் என்ற பெயரில் பிறந்த சாவித்ரி தேவி, கிரேக்க மற்றும் இத்தாலிய வம்சாவளியைச் சேர்ந்த பிரெஞ்சு குடிமகனான மாக்சிம் போர்டாஸ் மற்றும் ஜூலியா போர்டாஸ் (நீ நாஷ்) என்ற ஆங்கிலப் பெண்ணின் மகள் ஆவார் . குழந்தை பருவத்திலிருந்தே மற்றும் அவரது வாழ்நாள் முழுவதும், அவர் விலங்கு உரிமைகளுக்காக தீவிர ஆதரவாளராக இருந்தார் . அவரது ஆரம்பகால அரசியல் தொடர்புகள் கிரேக்க தேசியவாதத்துடன் இருந்தன . தனது இளமை பருவத்தில் அவர் ஜெர்மன் தத்துவம் மற்றும் ஜெர்மனியில் ஆர்வம் கொண்டிருந்தார்; முதலாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனியின் சிகிச்சையாலும் , கிரேக்க அகதிகளை ஒரே நேரத்தில் நடத்தியதாலும் அவர் கலக்கமடைந்தார். ஜெர்மனியின் தோல்விக்கு யூதர்களைக் குற்றம் சாட்டினார்.

கிரீஸ் மற்றும் பிரான்சில் கல்வி கற்ற போர்டாஸ், தத்துவம் மற்றும் வேதியியலைப் பயின்றார், லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் என்ற தனது ஆய்வறிக்கையின் அடிப்படையில் லியோன் பல்கலைக்கழகத்தில் தத்துவம் மற்றும் அறிவியலில் இரண்டு முதுகலைப் பட்டங்களையும் , வேதியியலில் முனைவர் பட்டத்தையும் பெற்றார் . அடுத்து அவர் கிரேக்கத்திற்குச் சென்று, புகழ்பெற்ற இடிபாடுகளை ஆய்வு செய்தார். இங்கே , ஹென்ரிச் ஷ்லிமேன் அனடோலியாவில் ஸ்வஸ்திகாக்களைக் கண்டுபிடித்ததைப் பற்றி அவர் அறிந்தார் . பண்டைய கிரேக்கர்கள் ஆரிய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்பது அவரது முடிவு . அவரது முதல் இரண்டு புத்தகங்கள் அவரது முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரைகள் : எஸ்ஸை-கிரிட்டிக் சுர் தியோஃபில் கைரிஸ் மற்றும் லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் . பைபிள் மீதான வெறுப்பாலும், பின்னர் பாலஸ்தீனத்தில் சியோனிச நடவடிக்கைகளாலும் செல்வாக்கு பெற்ற அவர், இளம் வயதிலேயே யூத எதிர்ப்பாளராக மாறினார். 1928 ஆம் ஆண்டின் முற்பகுதியில், போர்டாஸ் தனது பிரெஞ்சு குடியுரிமையைத் துறந்து கிரேக்க குடியுரிமையைப் பெற்றார் . 1929 ஆம் ஆண்டில் (அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலான மோதல் ஒரு வருடம்) அவர் லென்ட் காலத்தில் பாலஸ்தீனத்தின் பிரிட்டிஷ் ஆணைக்கு ஒரு யாத்திரையில் சேர்ந்தார், இது அவரது நம்பிக்கைகளை வலுப்படுத்தியது. போர்டாஸ் தனது யூத எதிர்ப்பில் பல்வேறு பிரெஞ்சு அறிவுஜீவிகளாலும் செல்வாக்கு பெற்றார், அவர்களுடன் யூத எதிர்ப்பு மிகுதியாக இருந்தது; அவர் குறிப்பாக எர்னஸ்ட் ரெனனால் பாதிக்கப்பட்டார்.



இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு , அவர் 1945 ஆம் ஆண்டு சாவித்ரி தேவி முகர்ஜி என்ற பெயரில் இந்தியாவைச் சேர்ந்த ஒரு பிரிட்டிஷ் குடிமகனின் மனைவியாக, பிரிட்டிஷ் இந்திய பாஸ்போர்ட்டுடன் இங்கிலாந்து சென்றார் . அவர் இங்கிலாந்தில் சிறிது காலம் தங்கினார், பின்னர் பிரான்சில் உள்ள தனது தாயாரைச் சந்தித்தார், அவருடன் பிரெஞ்சு எதிர்ப்புக்கு பிந்தையவரின் ஆதரவு குறித்து அவர் சண்டையிட்டார். பின்னர் அவர் ஐஸ்லாந்துக்குச் சென்றார் , அங்கு 1947 ஏப்ரல் 5-6 தேதிகளில் ஹெக்லா மலை வெடிப்பதைக் கண்டார். ஐஸ்லாந்தில் இருந்தபோது, அவர் நார்ஸ் தேவாலயத்தையும் ஏற்றுக்கொண்டார். அவர் சிறிது காலம் இங்கிலாந்துக்குத் திரும்பினார், பின்னர் அவர் ஸ்வீடனுக்குப் பயணம் செய்தார் , அங்கு அவர் ஸ்வென் ஹெடினைச் சந்தித்தார் .

ஜூன் 15, 1948 அன்று, அவர் நோர்ட்-எக்ஸ்பிரஸில் ஏறி டென்மார்க்கிலிருந்து ஜெர்மனிக்குச் சென்றார், அங்கு அவர் "ஜெர்மனியின் ஆண்களும் பெண்களும்" "நமது புகழ்பெற்ற தேசிய சோசலிச நம்பிக்கையைப் பற்றிப்பிடித்து எதிர்க்க" ஊக்குவித்த கையால் எழுதப்பட்ட துண்டுப்பிரசுரங்களின் ஆயிரக்கணக்கான பிரதிகளை விநியோகித்தார்! அவர் கோல்ட் இன் தி ஃபர்னஸில் தனது அனுபவத்தை விவரித்தார்.

1970களின் பிற்பகுதியில், அவருக்கு கண்புரை நோய் ஏற்பட்டது , இதன் விளைவாக அவரது பார்வை வேகமாக மோசமடைந்தது. இந்தியாவில் உள்ள பிரெஞ்சு தூதரகத்தின் எழுத்தரான மிரியம் ஹிர்ன், அவரை அடிக்கடி வீட்டிற்குச் சென்று கவனித்துக் கொண்டார். அவர் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்து, 1981 இல் ஜெர்மனிக்குத் திரும்பி பவேரியாவில் வசித்து, 1982 இல் பிரான்சுக்குத் திரும்பினார். சாவித்ரி 1982 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் எசெக்ஸில் உள்ள சிபிள் ஹெடிங்ஹாமில் ஒரு நண்பரின் வீட்டில் இறந்தார். அவரது மரணத்திற்கான காரணம் மாரடைப்பு மற்றும் கரோனரி த்ரோம்போசிஸ் என பதிவு செய்யப்பட்டது . அவர் இறக்கும் போது மாட் கோஹலின் அழைப்பின் பேரில் அமெரிக்காவில் விரிவுரை செய்யச் சென்று கொண்டிருந்தார். அவரது உடல் எசெக்ஸின் கோல்செஸ்டரில் ஒரு எளிய விழாவில் தகனம் செய்யப்பட்டது , இதில் டோனி வில்லியம்ஸ் மற்றும் இரண்டு இளம் பிரிட்டிஷ் நாஜிக்கள் கலந்து கொண்டனர். தேவியின் அஸ்தி ஒரு பொறிக்கப்பட்ட கலசத்தில் வர்ஜீனியாவின் ஆர்லிங்டனில் உள்ள அமெரிக்க நாஜி கட்சியின் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டது, பின்னர் அவை எடுத்துச் செல்லப்பட்டு விஸ்கான்சினின் மில்வாக்கியில் உள்ள "நாஜி மரியாதை மண்டபத்தில்" ஜார்ஜ் லிங்கன் ராக்வெல்லின் அஸ்திக்கு அடுத்ததாக மாட் கோஹலால் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது . அவர் இறக்கும் போது அவர் மிகவும் ஏழையாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

வாழ்க்கையில், தேவிக்கு சில சாதனைகள் மட்டுமே இருந்தன (குறைந்தபட்சம் நாசிசத்தை மீண்டும் தொடங்குவதற்கான அவரது இலக்குகளுடன் ஒப்பிடும்போது), ஆனால் அவரது எழுத்து நவ-நாஜி இயக்கத்தை, குறிப்பாக எஸோதெரிக் நவ-நாசிசத்தை பெரிதும் பாதித்து வருகிறது . கல்வியாளர் ஜெஃப்ரி கப்லான், தேவி "போருக்குப் பிந்தைய தேசிய சோசலிசத்தின் இடிபாடுகளில் இருந்து வெளிவந்த மிகவும் கட்டாய நபர்களில் ஒருவர்" என்று விவரித்தார், மேலும் நவ-நாஜி மறைபொருள் மீதான அவரது செல்வாக்கை "எந்தவொரு நபரை விடவும் அதிகமாக" குறிப்பிட்டார். அவரது படைப்புகள் ஆல்ட்-ரைட் , அத்துடன் புதிய யுக மதம் மற்றும் ஆழமான சூழலியல் ஆகியவற்றையும் பாதித்துள்ளன . அவரது எழுத்துக்களுக்கு மேலதிகமாக, பல தீவிர வலதுசாரிகளுடனான அவரது கடிதப் போக்குவரத்து நவ-நாஜி இயக்கத்திற்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தியது. அவர் சிலி நாட்டுத் தூதர் மிகுவல் செரானோவையும் பாதித்தார் , மேலும் அவரது ஹோலோகாஸ்ட் மறுப்பு எர்ன்ஸ்ட் ஜூண்டலைப் பாதித்தது . 1982 ஆம் ஆண்டில், பிராங்கோ ஃப்ரெடா தனது படைப்பான கோல்ட் இன் தி ஃபர்னஸின் ஜெர்மன் மொழிபெயர்ப்பை வெளியிட்டார் , மேலும் அவரது வருடாந்திர மதிப்பாய்வின் நான்காவது தொகுதியான ரிஸ்கார்டோ (1980), சாவித்ரி தேவிக்கு "ஆரிய புறமதத்தின் மிஷனரி " என்று அர்ப்பணிக்கப்பட்டது .

## கர்நாடக மாநிலத்தில் 2,809 விவசாயிகள் தற்கொலை

பெங்களூரு, ஏப்.6:

கர்நாடகாவில் பாகல் கோட்டை, தாவணகெரே தெற்கு ஆகிய இரு தொகுதிகளுக்கு வருகிற 9-ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இதையொட்டி பாகல் கோட்டையில் பாஜக சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மத்திய ரயில்வே இணை அமைச்சர் சோமண்ணா பேசியதாவது:

முதல்வர் பதவியை கைப்பற்றுவதில் சித்தராமையாவுக்கும் டி.கே. சிவகுமாருக்கும் இடையே பெரிய போரே நடக்கிறது. இதனால் கர்நாடக மக்களுக்கு எந்த நன்மையும் அவர்களால் செய்ய முடியவில்லை. இரண்டாவது முறையாக முதல்வர் பதவி வகிக்கும் சித்தராமையா தனது அதிகாரத்தை தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்தி கொண்டிருக்கிறார். அவரது ஆட்சியில் கர்நாடகா பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறது. விவசாயிகள், தொழிலாளர்கள், ஏழைகள் அவரது ஆட்சியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடகாவில் கடந்த 3 ஆண்டுகளில் 2,809 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டிருப்பதாக ஆளும் காங்கிரஸ் அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. பயிர்களுக்கு உரிய விலை நிர்ணயிக்காமலும், விலை நிர்ணயித்தாலும் அதனை அமல்படுத்தாமல் இருப்பதாலும் இந்த மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. விவசாயிகளின் மரணங்களுக்கு சித்தராமையா உரிய பதிலை அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## 28 மாவட்டங்களுடன் ஆந்திர மாநிலத்தின் புதிய வரைபடம் வெளியீடு



அமராவதி, ஏப்.6:

புதிய ஆந்திர மாநிலத்தின் ஒரே மற்றும் நிரந்தர தலைநகராக அமராவதியை அறிவிக்கும் மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப் பட்டுள்ளது. இதையடுத்து முதல் முறையாக தற்போது 28 மாவட்டங்கள் கொண்ட புதிய ஆந்திர மாநிலத்தின் வரை படத்தை தேசிய விபத்து தடுப்புத்துறை வெளியிட்டுள்ளது.

இதில் மாவட்டங்களின் எல்லைகள், வனப்பகுதிகள், சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் என அனைத்தும் துல்லியமாக தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் தொகுதிகள் வாரியாகவும் அந்த வரைப்படம் தெளிவாக உள்ளது. இந்த வரைபடத்தில் அமராவதியை தலைநகராக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆந்திராவின் பல்நாடு, குண்டூர், கிருஷ்ணா மற்றும் என்.டி.ஆர். மாவட்டங்களில் உள்ள பகுதிகளை இணைத்து அமராவதி நகரம் என தெள்ளத்தெளிவாக குறிப்பிடப் பட்டுள்ளது.

கடந்த ஜெகன் ஆட்சியில் இருந்த 26 மாவட்டங்களுடன் தற்போது கூடுதலாக மார்க்காபுரம் மற்றும் போலாவரம் இணைந்து 28 மாவட்டங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது.

புயல், வெள்ளம் போன்ற இயற்கை பேரிடரின் போது மாநில, மாவட்ட எல்லைகள் தெரிய வேண்டிய அவசியம் என்பதால், இந்த வரைபடத்தை முதல் முறையாக தேசிய விபத்து தடுப்புத்துறை தயாரித்ததாக கூறப்படுகிறது.

## மோடியின் கட்டுப்பாட்டில் பினராயி விஜயன் உள்ளார்: ராகுல்காந்தி பரபரப்பு குற்றச்சாட்டு



திருவனந்தபுரம், ஏப்.6:

கேரளத்தில் சட்டசபை தேர்தல் வருகிற 9-ந்தேதி நடக்கிறது. இதனால் அங்கு தலைவர்களின் இறுதி கட்ட பிரசாரம் சூடுபிடித்துள்ளது. அந்த வகையில் கேரளத்தில் ஒரே நாளில் பிரதமர் மோடி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி போன்ற தலைவர்கள் பிரசாரம் செய்தனர். பிரதமர் மோடி திருவனந்தபுரத்தில் ரோடு ஷோவும், திருவல்லாவில் பிரசார பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டு பா.ஜனதா தலைமையிலான கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்தார்.

எர்ணாகுளம், இடுக்கி, ஆலப்புழை ஆகிய மாவட்டங்களில் ராகுல் காந்தி காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பரப்புரையாற்றினார். காலை 10 மணிக்கு கொச்சி விமான நிலையம் வந்த அவர் நேராக ஆலப்புழை சென்று அங்கு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது:-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி ஆட்சியில் கேரளத்தில் 75 சதவீத விவசாயிகள் கடனில் சிக்கி தவிக்கிறார்கள். போதைப் பொருட்களின் களஞ்சியமாக கேரளம் மாறிவிட்டது. கன்னியாஸ்திரிகள் தாக்கப்படுகிறார்கள், கிறிஸ்தவர்கள் உள்பட சிறுபான்மையின மக்கள் பல வகைகளில் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். எப்ஸ்டீன் ஆவணத்தில் பிரதமர் மோடியின் பெயர் இடம் பெற்றுள்ளது. அதனை மறைக்க டிரம்ப் சொல்வதைப் போல மோடி ஆடுகிறார். பெட்ரோல், எரிவாயு எங்கிருந்து வாங்க வேண்டும் என்பதை தீர்மானிக்க டிரம்ப் யார்? கேரளத்தின் முதல்-மந்திரியும், மோடியும் தங்களை ஏகாதிபதிகளாக நினைக்கிறார்கள். பதவி இருப்பதால் அகங்காரத்தில் இருவரும் உள்ளனர். கேரளத்தில் முதல்-மந்திரி பினராயி விஜயனை பிரதமர் மோடி தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார். வெளிப்படையாக கூற வேண்டுமானால், இடது ஜனநாயக முன்னணியில் இடதுசாரி என்று ஒன்றும் இல்லை. தேர்தலுக்கு பிறகு இடதுசாரியில் எதுவும் மிஞ்சி இருக்காது. கேரளத்தின் இடது முன்னணி அரசை பா.ஜனதா இயக்கி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## உத்தரகாண்டில் சிறுத்தை தாக்குதலில் 4 வயது சிறுமி பலி







உத்தரகாண்ட், ஏப்.6:

பௌரி மாவட்டத்தில் உள்ள பட்கோட் கிராமத்தில் இரவு சுமார் 9 மணியளவில் திருஷ்டி ராவத் என்கிற சிறுமி தனது சகோதரி மற்றும் பாட்டியுடன் வீட்டின் அருகே அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தபோது திடீரென அங்கு வந்த ஒரு சிறுத்தை அச்சிறுமியை தூக்கிக்கொண்டு காட்டுப்பகுதிக்குள் சென்றது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து கிராம மக்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர் பின்னர் வீட்டிலிருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அச்சிறுமியின் உடல் கடித்து குதறப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

காவல்துறை மற்றும் வனத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். ஆனால், ஆத்திரமடைந்த கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், அச்சிறுமியின் உடலை அங்கிருந்து அப்புறப்படுத்த அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகளை அவர்கள் முதலில் தடுத்து நிறுத்தினர். வன அதிகாரி மகாதிம் யாதவ் சிறுமியின் குடும்பத்தினரைச் சந்தித்து, விதிமுறைகளின்படி சாத்தியமான அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதியளித்தார். வனத்துறை, சிறுத்தையைக் கண்காணிக்கவும் உள்ளூர் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யவும் விரிவான நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது.

மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகள் இரண்டு நாட்களுக்கு விடுமுறை என்று வட்டாரக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்.

## ஏப்.1 முதல் டிஜிட்டல் பரிவர்த்தனையில் அமலுக்கு வந்த புதிய விதிகள் என்னென்ன?

புதுடெல்லி, ஏப்.6:

இந்தியாவில் டிஜிட்டல் பரிவர்த்தனை தற்போது பெருகிவிட்டது. சாதாரண பெட்டிக்கடை முதல் வணிக வளாகங்கள் வரை யுபிஐ பரிவர்த்தனை செய்யப்படுவதை பார்க்க முடிகிறது. முன்பெல்லாம் கடை வீதிக்கு போனால் பர்ஸ் நிறைய பணம் வைத்துகொண்டு செல்ல வேண்டியிருக்கும். ஆனால், தற்போது கையில் ஒரு பைசா ரொக்கமாக இல்லாமல் காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை எங்கு வேண்டுமானாலும் சென்று வர முடியும் அளவிற்கு டிஜிட்டல் பரிவர்த்தனை அசுர வளர்ச்சி பெருகிவிட்டது. டிஜிட்டல் பரிவர்த்தனை பெருகிவிட்ட அதேவேளையில், பல மோசடிகளும் அதைவைத்து நடைபெறுவதை பார்க்க முடிகிறது. இதையடுத்து மோசடிகளை கட்டுப்படுத்தும் விதமாக ரிசர்வ் வங்கி கடுமையான விதிகளை கொண்டு வந்துள்ளது. கடந்த 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்த விதிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு;

*யுபிஐ., கார்டு, மொபைல் வாலெட் போன்ற அனைத்து டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கும் இரண்டு நிலை உறுதிப்படுத்துதல் என்பது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒடிபி மட்டுமின்றி பின் நம்பர், கடவுச்சொல் அல்லது பயோமெட்ரிக் போன்ற கூடுதல் சரிபார்ப்பு தேவைப்படும். இதனால் பரிவர்த்தனை சற்று நேரம் எடுத்துக்கொண்டாலும், மோசடிகளை தடுக்க அதிக பாதுகாப்பு கிடைக்கும்.

*குறைந்த தொகை கொண்ட பரிவர்த்தனைகள் எளிதாக செய்ய முடியும். எனினும், பெரிய தொகை அல்லது புதிய சாதனங்களில் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு கூடுதல் பாதுகாப்பு சோதனைகள் இருக்கும்.

*பாதுகாப்பு குறைபாடுகள் காரணமாக மோசடி நடந்தால், வங்கிகள் மற்றும் பணப்பரிவர்த்தனை நிறுவனங்கள் பயனர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டிய சூழல் உருவாகிறது. இதன் மூலம் புகார்களுக்கு விரைவான தீர்வு கிடைக்கும்.

*இனி ஒரு நாளில் 50 முறை மட்டுமே பேலன்ஸ் சரிபார்க்க முடியும். இ.எம்.ஐ., சந்தா போன்ற தானியங்கி பணப்பரிவர்த்தனைகள் இனி இரவு 9.30 மணி முதல் காலை 10 மணிக்கு முன்பாக நடந்து விடும்.

## திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.4.18 கோடி

திருப்பதி, ஏப்.6:

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 62 ஆயிரத்து 642 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 23 ஆயிரத்து 887 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தானம் அறிவித்த ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.4 கோடியே 18 லட்சம் ஆகும்.

## கியாஸ் சிலிண்டர் குடோனில் பயங்கர வெடி விபத்து - 4 பேர் பலி

சில்வசா, ஏப்.6:

தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி மற்றும் டையூ மற்றும் டாமன் யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ள மாவட்டம் தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி. இந்நிலையில், அம்மாவட்டத்தில் உள்ள சில்வசா நகரில் தொழிற்பேட்டை அமைந்துள்ளது. இங்கு கியாஸ் சிலிண்டர் குடோன் செயல்பட்டு வந்தது. இந்த குடோனில் சிலிண்டருக்கு நியூட்ரியன் கியாஸ் நிரப்பும் பணிகளும் நடைபெற்று வந்தது. இந்த குடோனில் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தில் குடோனில் பணியாற்றிய 4 பேர் உயிரிழந்தனர். மேலும், 2 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற தீயணைப்புத்துறையினர், போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆந்திரா: ஆற்றில் மூழ்கி கல்லூரி மாணவர்கள் 3 பேர் பலி

அமராவதி, ஏப்.6:

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டம் ராஜமுந்திரி நகரின் ஜம்பெட்டா பகுதியில் உள்ள கல்லூரியில் என்ஜினியரிங் படித்து வந்த 4 மாணவர்கள் நேற்று சுற்றுலா சென்றுள்ளனர். மாணவர்கள் 4 பேரும் பிச்சகலங்கா பகுதியில் கோதாவரி ஆற்றில் குளிக்க சென்றனர். ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தபோது 4 மாணவர்களும் ஆற்றில் அடித்து செல்லப்பட்டனர்.

இதில் ஒரு மாணவர் மட்டும் நீந்தி கரையை அடைந்தார். ஆனால், எஞ்சிய 3 மாணவர்களும் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர். இந்த சம்பவம் குறித்து அறிந்த போலீசார் விரைந்து சென்று ஆற்றில் மூழ்கிய 3 மாணவர்களின் உடல்களையும் தேடி வருகின்றனர்.

## உத்தரபிரதேசத்தில் நாட்டுச்சாராயம் குடித்து 3 பேர் பலி

மீரட், ஏப்.6:

உத்தரபிரதேச மாநிலம் மீரட்டில் இயங்கி வந்த அரசு அனுமதி பெற்ற நாட்டுச்சாராய கடையில் நேற்று முன்தினம் சாராயம் குடித்ததில் பாபுராம் (வயது 60), ஜிதேந்திர (35), அங்கித் (40) ஆகிய 3 பேருக்கு வாந்தி, வயிற்றுவலி ஏற்பட்டது. உடனடியாக அவர்கள் அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி ஜிதேந்திர, அங்கித் மற்றும் பாபுராம் ஆகியோர் நேற்று உயிரிழந்தனர். 3 பேரின் பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பிறகே காலாவதியான சாராயத்தை உட்கொண்டதும் அவர்கள் உயிரிழந்தனரா? அல்லது சாராயத்தில் விஷம் கலந்து இருந்ததா? என்பது தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர்.

## கியாஸ் தட்டுப்பாட்டுக்கு மத்திய அரசின் அலட்சியமே காரணம்: டி.கே.சிவக்குமார்

பெங்களூரு, ஏப்.6:

பெங்களூரு சதாசிவ நகரில் உள்ள தனது வீட்டில் துணை முதல்-மந்திரி டி.கே.சிவக்குமார் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-

பெங்களூரு உள்பட மாநிலத்தில் ஆட்டோ டிரைவர்கள் எல்.பி.ஜி. கியாசுக்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதை பார்த்தேன். கியாஸ் தட்டுப்பாட்டுக்கு மத்திய அரசின் அலட்சியமே முக்கிய காரணமாகும். ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் என்பது பற்றி தெரிந்திருந்தும் மத்திய அரசு எந்த விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்க வில்லை. மத்திய அரசின் வெளியுறவு கொள்கை, அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காததால்தான் தற்போது ஆட்டோ டிரைவர்கள் கியாஸ் கிடைக்காமல் பரிதவித்து வரு கின்றனர். நம்மால் தான் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என் பது தெரிந்திருந்தும் மத்திய அரசு மவுனமாக இருந்து வரு கிறது. கியாஸ் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டு மக் களிடம் மத்திய அரசு மன்னிப்பு கேட்க வேண்டும்.

பாகல்கோட்டை மற்றும் தாவணகெரே தெற்கு தொகுதிகளுக்கு நடக்கும் இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெறுவது உறுதி. காங்கிரஸ் வேட்பாளர்களின் வெற்றிக்காக கட்சி தொண்டர்கள் நேர்மையாகவும், கடுமையாகவும் உழைக்கி றார்கள். காங்கிரசின் 5 உத்தரவாத திட்டங்களையும் ஒவ்வொரு வீட்டுக்கும் கட்சி தொண்டர்கள் கொண்டு போய் சேர்த்துள்ளனர். விலைவாசி உயர்வால் சிக்கி தவித்த மக்க ளுக்கு உத்தரவாத திட்டங்கள் பயன் உள்ளதாக இருக்கிறது.

மந்திரி ஜமீர் அகமது கான் கேரளத்தில் பிரசாரத்தில் ஈடுபட் டுள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ராகுல் காந்தி பிரதமரானால் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து - மல்லிகார்ஜுன கார்கே



புதுச்சேரி, ஏப்.6:

புதுச்சேரி சட்டசபை தேர்தல் வரும் 9-ம் தேதி நடைபெற உள்ளது. 30 தொகுதிகளை கொண்ட புதுச்சேரியில் 294 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். ஓட்டுபதிவிற்கு இன்னும் 6 நாட்களே உள்ள நிலையில், வேட்பாளர்களை ஆதரித்து பாஜக, காங்கிரஸ் தேசிய கட்சி தலைவர்கள் புதுச்சேரிக்கு வந்து பிரசாரம் செய்து வருகின்றனர். அடுத்தடுத்து அரசியல் கட்சி தலைவர்கள் புதுச்சேரி வர உள்ளதால் இறுதி கட்ட பிரசாரம் களைகட்டியுள்ளது. இந்நிலையில், காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:-

பிரதமர் மோடி செல்லும் இடமெல்லாம் நான் ஊழலை ஒழிப்பேன் மற்றும் அதை சகித்துக் கொள்ள மாட்டேன் என்று சொல்லி வருகிறார். இந்த நாட்டில் உள்ள சொத்துக்களை எல்லாம் அது விமான நிலையம், துறைமுகம் அல்லது பொதுத்துறை நிறுவனமாக இருந்தாலும் சரி அனைத்தையும் மோடி அதானிக்கு தாரை வார்த்து கொடுக்கிறார். இந்த புதுச்சேரி மாநிலத்திலே தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் என்.அர்.பாஜக அரசு பொது சொத்துக்களை கொள்ளையடிக்கிறார்கள். கோவில் சொத்துக்களையும் கொள்ளையடிக்கின்றனர். அது மட்டுமல்லாமல் இந்த ஆட்சியில் எல்லா துறைகளிலும் மக்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. நமது மாநிலத்தின் கலசாரத்தை குட்டி சுவராக உருவாக்கி கொண்டு வருகின்றனர். டெல்லியில் இருந்து வந்திருக்கிறேன் இந்த அரசு கடந்த 5 ஆண்டுகளில் 400க்கு மேற்ப்பட்ட ரீசோ பார்களை திறந்துள்ளது. புதுச்சேரியில் மக்கள் கேட்பது குடிநீர், பாஜக தருவது மதுவை. புதுச்சேரியில் மதுபான ஆலைகளை மட்டுமே பாஜக கூட்டணி அரசு தொடங்கி உள்ளது.

ராகுல்காந்தி பிரதமரானால் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும். புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து தரப்படுமென 2019, 2024 தேர்தலில் வாக்குறுதியாக அளித்துள்ளோம். 2029-ல் ராகுல் காந்தி இந்நாட்டின் பிரதமராக வரும்போது புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## எப்.சி.ஆர்.ஏ. சட்ட மசோதா; கிறிஸ்தவ மத தலைவர்கள் கவலைப்பட அவசியமில்லை- கிரண் ரிஜிஜு



திருச்சூர், ஏப்.6:

திருச்சூர் மாவட்டம் சேலக்கரா சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் கே. பாலகிருஷ்ணனுக்கு ஆதரவாக மத்திய நாடாளுமன்ற விவகாரத் துறை மந்திரி கிரண் ரிஜிஜூ தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:-

நாட்டில் சட்டவிரோதமாக செயல்படும் அமைப்புகளை குறிவைத்து இந்த வெளிநாட்டு நிதி பங்களிப்பு (முறைப்படுத்துதல் (எப்.சி.ஆர்.ஏ.) சட்ட திருத்த மசோதாவை கொண்டு வர மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதே நேரம் நேர்மையான முறையில் வெளிநாடுகளில் இருந்து பணம் கொண்டு வருவோர், இதுகுறித்து எந்த கவலையும் பட வேண்டியதில்லை.

இந்த சட்ட திருத்த மசோதா நிறைவேறும் முன்பு அனைத்து தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். பா.ஜனதா தலைமை, தேர்தலுக்கு பிறகு இதற்காக டெல்லியில் அனைத்து மத தலைவர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி முடிவு எடுக்கும். தேசபாதுகாப்புக்கு எதிராக செயல்படும் அமைப்புகள் மட்டுமே இதில் இலக்காக்கப்படும். கிறிஸ்தவ மத தலைவர்கள் இதுகுறித்து எங்களுடன் பேசி உள்ளனர். தவறு செய்பவர்களுக்கு மட்டுமே இந்த சட்ட திருத்த மசோதா பாதிப்பை ஏற்படுத்தும். அனைத்து மதத்தினரையும் நாங்கள் பாதுகாப்போம்" இவ்வாறு அவர் கூறினார்.




## வாழப்பாடி அருகே இளம்பெண் தற்கொலை: கணவர் குடும்பத்தினரிடம் போலீசார் அதிரடி விசாரணை

**வாழப்பாடி, ஏப்.06:** வாழப்பாடி அடுத்த பேளூரை சேர்ந்தவர் கார்த்திகேயன் (வயது 25). இவர் அதே பகுதியில் இ-சேவை மையம் நடத்தி வருகிறார். இவர் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு சினேகா (22) என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதிக்கு யாசினி (2) என்கின்ற ஒரு பெண் குழந்தை உள்ளது.

இந்நிலையில் நேற்று பகல் 3 மணி அளவில் வீட்டில் இளம்பெண் சினேகா திடீரென தூக்கில் தொங்கினார். அவரை மீட்ட உறவினர்கள் மருத்துவமனைக்கு கொண்டு சென்று பரிசோதித்த போது அவர் ஏற்கனவே இறந்து போனது தெரியவந்தது.

இது குறித்து தகவலறிந்த வாழப்பாடி போலீஸ் இன்ஸ்பெக்டர் வேல்முருகன் தலைமையிலான போலீசார் தற்கொலை செய்து கொண்ட இளம்பெண் சினேகா உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

திருமணமான 4 ஆண்டுகளுக்குள் இளம்பெண் தற்கொலை செய்து கொண்டதால் இதுகுறித்து சேலம் ஆர்.டி.ஓ. மற்றும் வாழப்பாடி துணை போலீஸ் சூப்பிரண்டு விசாரணைக்கு வாழப்பாடி போலீசார் பரிந்துரை செய்துள்ளனர்.

இதனை தொடர்ந்து ஆர்.டி.ஓ. மற்றும் துணை போலீஸ் சூப்பிரண்டு ஆகியோர் கார்த்தியேன் குடும்பத்தினரிடம், சினேகா குடும்பத்தினரிடமும் சினேகா இறந்த காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## காதலித்த போது செலவு செய்த பணத்தை திருப்பி கேட்டதால் ஆத்திரம்- சட்ட கல்லூரி மாணவரை கடத்தி தாக்கிய கும்பலால் பரபரப்பு

**கடலூர், ஏப்.06:** கடலூர் மாவட்டத்தை சேர்ந்தவர் சசிகுமார் (வயது19). இவர் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் தங்கி வேலை பார்த்து கொண்டே மதுரவாயலில் உள்ள தனியார் கல்லூரியில் சட்டம் படித்து வருகிறார்.

இவருக்கு தாம்பரம் பகுதியை சேர்ந்த 22வயது கல்லூரி மாணவி ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டது. இதையடுத்து கடந்த ஒரு வருடமாக இருவரும் நெருங்கி பழகி காதலித்து வந்ததாகவும் கூறப்படுகிறது. அப்போது சினிமா தியேட்டர், கடற்கரை உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா தளங்களுக்கும் ஜோடியாக காதலர்கள் இருவரும் சுற்றி திரிந்தனர். இதற்கிடையே திடீரென ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக காதலர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து கடந்த மாதம் காதலன் சசிகுமாரை விட்டு மாணவி பிரிந்து சென்றுவிட்டார்.

ஆசை காதலி பிரிந்து சென்றதால் அவரை மறக்க முடியாமல் தனிமையில் தவித்து வந்த சசிகுமார் ஒரு கட்டத்தில் பொறுமை இழந்து மாணவியை பின் தொடர்ந்து சென்று "என்னை விட்டு பிரிந்து சென்ற நீ இதுவரை என்னிடம் வாங்கிய ரொக்கம் மற்றும் நான் உனக்கு செலவு செய்த பணத்தையும் சேர்த்து திருப்பி கொடு" என்று கேட்டு தொடர்ந்து தொல்லை கொடுத்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த மாணவி தனது நண்பர்களுடன் சேர்ந்து நேற்று சசிகுமாரை வலுக்கட்டாயமாக காரில் ஏற்றி கடத்தி சென்றார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. மேலும் தாம்பரத்தில் உள்ள ஒரு வீட்டின் அறையில் சசிகுமாரை அடைத்து வைத்து சரமாரியாக தாக்கியுள்ளனர். காதலியால் பணத்தையும் நிம்மதியையும் இழந்து தாக்குதலுக்கு உள்ளாகி மனம் நொந்து போன சசிகுமார் அங்கிருந்து தப்பி வந்து தன்னை கடத்தி தாக்கிய மாணவி மற்றும் அவரது நண்பர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோயம்பேடு பஸ் நிலைய போலீசில் புகார் அளித்தார். இது தொடர்பாக இன்ஸ்பெக்டர் ரபிக் உசேன் மற்றும் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மாமனாரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற மருமகன்: ஆம்பூர் அருகே பயங்கரம்



**ஆம்பூர், ஏப்.06:** ஆம்பூர் அருகே குடும்ப தகராறில் மாமனாரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற மருமகனை போலீசார் தேடிவருகின்றனர். திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த மாதனூர் ஊராட்சி ஒன்றியம் தேவலாபுரத்தை சேர்ந்தவர் ரவி (56). இவரது மகள் கிருத்திகா. இவரை அதே பகுதியை சேர்ந்த கூலித்தொழிலாளியான சதீஷ்குமார் (33) என்பவர் இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார்.

இந்த தம்பதியருக்கு 4 வயதில் மகனும், ஒரு பெண் குழந்தையும் உள்ளது. இந்நிலையில் தம்பதியரிடையே அடிக்கடி கருத்து வேறுபாடு ஏற்பட்டு வந்ததாக தெரிகிறது. இதன் காரணமாக கிருத்திகா, தாய் வீட்டிற்கு வந்துவிட்டாராம். இந்நிலையில் நேற்றிரவு கிருத்திகாவுக்கும், சதிஷ்குமாருக்கும் இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த சதீஷ்குமார், தான் மறைத்து வைத்திருந்த நாட்டு துப்பாக்கியை எடுத்து வந்து அங்கு அமர்ந்திருந்த மாமனார் ரவியை சுட்டார். இதில் ரவியின் மார்பில் குண்டு பாய்ந்தது.

சத்தம் கேட்டு வந்த அக்கம்பக்கத்தினர் உடனடியாக ரவியை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள், ரவி ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து தகவலறிந்த திருப்பத்தூர் எஸ்பி சியாமளாதேவி சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டார். சம்பவம் குறித்து தகவலறிந்த உம்ராபாத் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


## ஆர்.கே.பேட்டை அருகே வாகன சோதனை: ஆந்திராவில் இருந்து கடத்தி வந்த ஹான்ஸ் பறிமுதல்; வாலிபர் கைது



**ஆர்.கே.பேட்டை, ஏப்.06:** ஆர்.கே.பேட்டை அருகே வெள்ளாத்தூர் கூட் சாலை பகுதியில் நேற்று மாலை ஆர்.கே.பேட்டை எஸ்ஐ முனிரத்தினம் தலைமையில் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அவ்வழியே ஆந்திராவில் இருந்து திருத்தணி நோக்கி வந்த ஒரு பைக்கை நிறுத்தி சோதனை செய்தனர். பைக்கின் பெட்ரோல் டேங்க் கவரில் மறைத்து வைத்திருந்த 15 பாக்கெட் ஹான்ஸ் போதை புகையிலை பொருள் கடத்தி வந்திருப்பது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து, போதை புகையிலையை பறிமுதல் செய்து பைக்குடன் வாலிபரை காவல் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரித்தனர். அவர் ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், பாலசமுத்திரம் மண்டலத்தை சேர்ந்த பாபு (30) என்பதும், ஆந்திர மாநிலத்தில் இருந்து போதை புகையிலை பொருட்களை தமிழக பகுதிகளுக்கு கடத்தி வந்து விற்பனை செய்து வந்திருப்பதும் தெரியவந்தது. இதுகுறித்து ஆர்.கே.பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து, பாபுவை கைது செய்து விசாரிக்கின்றனர்.

# திருப்பரங்குன்றம் கோவிலில் தேரோட்டம் கோலாகலம்: திரளான பக்தர்கள் வழிபாடு



**திருப்பரங்குன்றம், ஏப்.06:** முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் முதல்படை வீடான மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி திருவிழா 15 நாட்கள் விமரிசையாக நடைபெறும். இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த 23-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடந்து வருகிறது. நேற்று முன்தினம் முருகப்பெருமானுக்கு பட்டாபிஷேகம் நடந்தது.

திருவிழாவின் முத்தாய்ப்பாக நேற்று சுப்பிரமணிய சுவாமி, தெய்வானை அம்பாளுக்கு திருக்கல்யாணம் கோலாகலமாக நடந்தது. முன்னதாக நேற்று அதிகாலை 5 மணி அளவில் உற்சவர் சன்னதியில் சுப்பிரமணிய சுவாமிக்கும், தெய்வானை அம்பாளுக்கும் தங்கம், பவளம், வைடூரிய ஆபரணங்களும், வண்ண பட்டாடையாலும், பல வண்ண மலர்களாலும் மணக்கோல அலங்காரம் செய்யப்பட்டது.

பின்னர் மேளதாளங்கள் முழங்க உற்சவர் சன்னதியில் இருந்து முருகப்பெருமான், தெய்வானை அம்பாளுடன் புறப்பட்டு சன்னதி தெரு வழியாக பசுமலை மூலக்கரை அருகே உள்ள சந்திப்பு மண்டபத்திற்கு சென்றார். அதேவேளையில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் இருந்து மேளதாளங்கள் முழங்க பிரியாவிடையுடன் சுந்தரேசுவரரும், மீனாட்சி அம்மனும் தனித்தனி பல்லக்குகளில் புறப்பட்டு திருப்பரங்குன்றம் நோக்கி வந்தனர்.

காலை 8 மணிக்கு சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முருகப்பெருமான் தனது தாய், தந்தையான மீனாட்சி அம்மன்-சுந்தரேசுவரரை வணங்கி வரவேற்றார்.

இதனையடுத்து மகா தீபாராதனை நடைபெற்றது. அங்கிருந்து முருகப்பெருமான், தெய்வானை அம்பாள், மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரர் திருப்பரங்குன்றம் நோக்கி வந்தனர். வழிநெடுகிலும் ஆங்காங்கே அமைக்கப்பட்டு இருந்த திருக்கண்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

கோவிலுக்குள் லட்சுமி தீர்த்தம் செல்லும் வழியில் உள்ள ஒடுக்கம் மண்டபத்தில் கண் ஊஞ்சல் நடந்தது. தொடர்ந்து வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்த ஆறுகால் மண்டபத்தில் பிரியாவிடையுடன் சுந்தரேசுவரரும், மீனாட்சி அம்மனும் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தனர். இதனை தொடர்ந்து தெய்வானையுடன் முருகப்பெருமான் மணமேடையில் எழுந்தருளினார். அக்னி வளர்க்கப்பட்டு திருமண சடங்குகள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன.

வெண்பட்டு உடுத்தி முருகப் பெருமானும், மஞ்சள் பட்டு உடுத்தி தெய்வானை அம்பாளும் அருள்பாலித்தனர். சிவாச்சாரியார்கள் முருகப்பெருமான் மற்றும் தெய்வானை அம்பாளின் பிரதிநிதிகளாக இருந்து பட்டாடை மற்றும் பூமாலைகளை மாற்றிக் கொண்டனர் இதனையடுத்து பகல் 12.20 மணிக்கு மேள தாளங்கள் முழங்க, தெய்வானை அம்பாளுக்கு முருகப்பெருமான் மங்கல நாண் சூட்டி திருக்கல்யாண வைபோகம் கோலாகலமாக நடந்தது.

அப்போது அங்கு கூடி இருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள், 'அரோகரா' கோஷம் முழங்க அட்சதை தூவி வழிபட்டனர். மேலும் பெண்கள் புதிய மங்கலநாண் மாற்றிக்கொண்டனர். திருக்கல்யாணத்தையொட்டி கோவில் வளாகத்தில் உள்ள வள்ளி தேவஸ்தான மண்டபத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நேற்று இரவு 16 கால் மண்டபம் அருகே பிரியாவிடை நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் பூப்பல்லக்கில் தெய்வானையுடன் முருகப்பெருமான் எழுந்தருளினார். பின்னர் சுந்தரேசுவரரும்-மீனாட்சி அம்மனும் விடை பெற்று மதுரைக்கு புறப்பட்டனர்.

இந்நிலையில் விழாவின் சிகர நிகழ்ச்சியாக இன்று (ஞாயிற்றுக்கிழமை) மகா தேரோட்டம் கோலாகலமாக தொடங்கி நடைபெற்று வருகிறது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் "அரோகரா.." முழக்கத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்து வருகின்றனர். 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ஏப்.8, 9-ம் தேதிகளில் கேரளாவுக்கு தமிழகத்தில் இருந்து தோட்ட தொழிலாளர்கள் வருவதற்கு தடை



**கூடலூர், ஏப்.06:** கேரள மாநிலத்தில் வரும் 9-ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளதால் 8, 9 ஆகிய தேதிகளில் தமிழகத்தில் இருந்து தோட்டத் தொழிலாளர்கள் கேரளத்துக்கு வர தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழக- கேரள எல்லையில் தேனி மாவட்டம் அமைந்துள்ளது. இங்கிருந்து குமுளி, கம்பம் மெட்டு, போடிமெட்டு வழியாக கேரளா செல்வதற்கான மலைச்சாலைகள் உள்ளன. இங்குள்ள இடுக்கி மாவட்டத்தில் ஏலக்காய், காபி, தேயிலை எஸ்டேட்கள் உள்ளன. இங்கு பணியாற்ற தமிழகத்தில் இருந்து ஏராளமான தொழிலாளர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இந்நிலையில், வரும் 9-ம் தேதி கேரள சட்டப்பேரவைக்கான வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதை முன்னிட்டு, கடந்த சில வாரங்களாக மாநில எல்லையில் இரு மாநில அதிகாரிகள் சார்பில் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதன் ஒருபகுதியாக, கேரளத்தில் வாக்குப்பதிவு நடைபெறும் ஏப்.9 மற்றும் அதற்கு முந்தைய நாளான 8 ஆகிய 2 நாட்கள் கேரளாவுக்குள் தோட்ட தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு வரும் ஜீப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், வழக்கமான பொது மற்றும் தனியார் போக்குவரத்துக்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை. இதுகுறித்து வனத்துறையினர் கூறுகையில், 'வரும் 9-ம் தேதி வாக்குப் பதிவுக்காக கேரளத்தில் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. அன்று எஸ்டேட் உள்ளிட்ட பல இடங்களில் எந்த வேலையும் நடைபெறாது. மேலும் அரசு, பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவன தொழிலாளர்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

வாக்குப் பதிவு நாளில் வெளி மாநிலத்தில் இருந்து அதிகப்படியான ஆட்கள் இங்கு வருவது நன்னடத்தை விதிகளுக்கு எதிரானது என்பதால், இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது' என்றனர். இதுகுறித்து ஒப்பந்ததாரர்கள், ஜீப் ஓட்டுநர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 12 வயது சிறுமிக்கு தொந்தரவு: வடமாநில வாலிபருக்கு அடி

**பெரம்பூர், ஏப்.06:** 12 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த வடமாநில வாலிபரை சரமாரியாக தாக்கி போலீசில் ஒப்படைத்தனர். சென்னை வியாசர்பாடி பகுதியை சேர்ந்த 39 வயது பெண்ணின் கணவர் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார்.

இவரது 12 வயது மகள் அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வருகிறார்.

கடந்த 2ம் தேதி சிறுமி தனது பாட்டி வீட்டுக்கு சாப்பாடு எடுத்துசெல்லும்போது அதே பகுதியை சேர்ந்த ஒருவர் திடீரென அந்த சிறுமியை அழைத்து தவறான முறையில் சைகை செய்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த சிறுமி, இதுபற்றி உறவினர்களிடம் கூறியுள்ளார்.

இதையடுத்து சிறுமியின் உறவினர்கள் சென்று அந்த நபரை சரமாரியாக தாக்கி வியாசர்பாடி காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். பின்னர் அவரை செம்பியம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். போலீசார் நடத்திய விசாரணையில், அந்த நபர் ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த சுனில் (36) என்பதும் பாரிமுனை குடோன் தெருவில் துணிக்கடையில் வேலை செய்து வருவதும் தெரிந்தது. போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குபதிவு செய்து கைது செய்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# த.வெ.க. தொண்டர்கள் சென்ற வேன் 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது; 21 பேர் படுகாயம்



**நீலகிரி, ஏப்.06:** தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ந்தேதி நடைபெறுகிறது. இதையொட்டி நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளராக நாமக்கல்லை சேர்ந்த வக்கீல் தங்கராஜ் அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார்.இதையொட்டி நாமக்கல்லில் இருந்து தேர்தல் பிரசாரம் செய்ய அவரது ஆதரவாளர்கள் குன்னூருக்கு வேனில் வந்தனர்.

வழியில் சென்னையை சேர்ந்த த.வெ.க. நிர்வாகிகள் 7 பேர் 'லிப்ட்' கேட்டு அந்த வேனில் ஏறினர். அவர்களை ஏற்றிக் கொண்டு வேன் கரும்பாலம் அருகே சென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த வேன் சாலையோர 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது. இதனால் வேனில் இருந்தவர்கள் பயந்து அபாயக் குரல் எழுப்பினர். இதை அந்த வழியாக வந்தவர்கள் பார்த்து போலீசார் மற்றும் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் விரைந்து வந்த அவர்கள் பொதுமக்கள் உதவியுடன் வேனில் இருந்தவர்களை மீட்டு குன்னூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்தில் வேனில் இருந்த டிரைவர், கிளீனர் உள்பட 21 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்து குறித்து கேத்தி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியில் ரூ.9.5 கோடி மதிப்புள்ள நகைகளை தேர்தல் பறக்கும் படை பறிமுதல்



**ராமநாதபுரம், ஏப்.06:** ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியில் ரூ.9.5 கோடி மதிப்புள்ள நகைகளை தேர்தல் பறக்கும் படை பறிமுதல் செய்தது.

திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த ராஜா 18 பெட்டிகளில் தங்கம், வைரம், வெள்ளி பொருட்களைக் கொண்டு வந்துள்ளார்.

உரிய ஆவணம் இல்லாததால் நகைகளை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட ரூ.9.5 கோடி மதிப்புள்ள நகைகள் முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

# புதுச்சேரியில் மதுபான விற்பனைக்கு ரசீது கட்டாயம்; மொத்த விற்பனைக்கு தடை

**புதுச்சேரி, ஏப்.06:** புதுச்சேரியில் மதுபானம் விற்பனைக்கு ரசீது கட்டாயம் தரவேண்டும். மொத்த விற்பனைக்கு தடை விதித்து கலால் துறை உத்தரவிட்டுள்ளது. மேலும், விதி மீறினால் உரிமம் சஸ்பெண்ட் அல்லது ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கலால் துறை துணை ஆணையல் மாத்யூ பிரான்சிஸ் வெளியிட்ட உத்தரவு: புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள பல மதுபானக் கடைகள் மற்றும் மதுபான விடுதிகள் விற்பனையின் போது முறையான ரசீதுகளை வழங்குவதில்லை என புகார்கள் வந்துள்ளன.

மதுபானம் வழங்கும் உரிமம் பெற்ற அனைத்து மதுபானக் கடைகள் / ஓட்டல்கள் / உணவகங்களின் அனைத்து உரிமதாரர்களுக்கும், வாங்கப்பட்ட அளவைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு விற்பனைக்கும் முறையான ரசீதை தரவேண்டும். அதேபோல் மதுபானம் மொத்தமாக விற்பனை செய்யப்படுவதாகவும் புகார்கள் வந்துள்ளன.

ஒவ்வொருகொள்முதலுக்கும் ரசீது வழங்காதது, மொத்த விற்பனையை மறைப்பதைக் காட்டுவதோடு, அனுமதிக்கப்பட்ட அளவைத் தாண்டி மதுபானம் விற்பனை செய்வதற்கு உரிமதாரர் சாக்குப்போக்கு சொல்லவும் வழிவகுக்கிறது. மேலும், ரசீதுகள் இல்லாமல் விற்கப்படும் எந்தவொரு மதுபான விற்பனையும் (அளவைப் பொருட்படுத்தாமல்), புதுச்சேரி சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026-ல் ஈடுபட்டுள்ள நபர்கள், வாக்காளர்களைத் தூண்டுவதற்காகமதுபானத்தைக் குவித்து வைக்க உரிமதாரருக்கு மறைமுகமாக வழிவகுக்கும் என்று இப்போது கருதப்படுகிறது.

அதன்படி, செல்லுபடியாகும் ரசீதுகள் இல்லாத அனைத்து விற்பனைகளும் மொத்த விற்பனையாகக் கருதப்படும். எனவே, புதுச்சேரி மண்டலத்தின் அனைத்து மதுபான உரிமதாரர்கள் / குத்தகைதாரர்களும், முறையான ரசீதுகளுடன் மற்றும் அனுமதிக்கப்பட்ட விற்பனை அளவிற்குள் மதுபானங்களை விற்குமாறு இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பரிந்துரைக்கப்பட்ட வரம்பிற்கு மேல் மதுபானம் விற்பனை செய்வது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. கண்டிப்பாக விதிகள் பின்பற்றப்பட வேண்டும். இதில் ஏற்படும் எந்தவொரு தவறும் மிகவும் கடுமையாகக் கருதப்பட்டு, புதுச்சேரி கலால் சட்டம் 1970-இன் பிரிவு 28(1)(e)-இன் கீழ் உரிமங்கள் இடைநீக்கமோ ரத்தோ செய்யப்படும் என தெரிவித்துள்ளார்.



ஏப்.06: ஆழியூர் பிரிவு சாலை ரோடு அருள்மிகு ப்ரீ வீர சக்தி விநாயகர் கோயிலில் தமிழ்நாடு இபேப்பர் பண்பலை மற்றும் தெய்வம் இதழ் தமிழாடிவி சார்பில் சங்ஹட ஹர சதுர்த்தி அபிஷேகம் ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது திரவியம் மஞ்சள் பொடி மாப்பொடி இளநீர் தயிர் பால் சந்தனம் அபிஷேகம் ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது நிகழ்வு ஏற்பாடு திரு ஆழியூர் நாகராஜன் பட்டதாரி ஆசிரியர் திரு ஆர் மணிவண்ணன் ஆகியோர் சிறப்பாக செய்தனர்!




ஏப்.06: ஆர்கேநகர் ஒன்னாவது சர்க்கிள் 39 வட்டம் தேர்தல் பணிமனை திறக்கும் பொழுது காங்கிரஸ் சொந்தங்கள்



ஏப்.06: தமிழ்நாடு இபேப்பர் பண்பலை மற்றும் தெய்வம் இதழ் தமிழாடிவி சார்பில் வாசகர்கள் நேயர்கள் சார்பாக சிக்கல் ஆவராணி ரோடு அருள்மிகு ப்ரீ செண்பக விநாயகர் கோவிலில் மஹா சங்கல்பம் செய்து அபிஷேகம் ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது திரவியம் மஞ்சள் மாப்பொடி இளநீர் தயிர் பால் சந்தனம் அபிஷேகம் நடைபெற்றது ஆலய குருக்கள் அருண் மற்றும் பட்டதாரி ஆசிரியர் திரு மணிவண்ணன் ஆகியோர் சிறப்பாக செய்தனர் அனைவருக்கும் சுண்டல் சர்க்கரை பொங்கல் புளியோதரை வழங்கப்பட்டது!












# தங்களுக்கு கீழ்ப்பட்டவையாக அல்ல ஒன்றிய அரசு, மாநிலங்களை சம பங்காளிகளாக கருத வேண்டும்: உரிய மரியாதை, அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்

**பாட்னா, ஏப்.06:** ஒன்றிய அரசு மாநிலங்களை சமபங்காளிகளாக கருத வேண்டும், தங்களுக்கு கீழ்பட்டவையாக கருதக்கூடாது என்று உச்ச நீதிமன்ற பெண் நீதிபதி பி.வி.நாகரத்னா கருத்து தெரிவித்தார். 'உரிமைகளுக்கு அப்பாற்பட்ட அரசியலமைப்புவாதம்: கட்டமைப்பு ஏன் முக்கியம்?' என்ற தலைப்பில் பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள சாணக்கியா தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய உச்ச நீதிமன்ற மூத்த நீதிபதி பி.வி.நாகரத்னா கூறியதாவது: ஒன்றிய அரசு மாநிலங்களை தங்களுக்கு கீழ்ப்பட்டவையாக அல்லாமல், சம பங்காளிகளாகவே கருத வேண்டும். அதிகாரப் பிரிவினை என்பது சம அந்தஸ்து கொண்ட அமைப்புகளுக்கு இடையிலான ஒரு அரசியலமைப்பு ஏற்பாடு. ஒன்றிய-மாநில உறவுகள் தொடர்பான விவகாரங்களில் அரசியல் கட்சிகளுக்கு இடையிலான வேறுபாடுகளை ஒதுக்கி வைக்க வேண்டும்.



ஒன்றியத்திலும், மாநில அளவிலும் எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறது என்பதைச் சார்ந்ததாக நிர்வாகம் இருக்கக்கூடாது. மேலும் கூட்டாட்சித் தத்துவம் என்பது தன்னாட்சி பற்றியது மட்டுமல்ல, மாறாக தனித்தனி அதிகார மையங்களைக் கொண்டது.

ஒவ்வொரு மையமும் மற்றொன்றுக்கு ஒரு எதிர்சக்தியாகச் செயல்படும் திறன் கொண்டது. எனவே நிர்வாகம் என்பது ஒருதலைப்பட்சமான கட்டளையாக இல்லாமல், பேச்சுவார்த்தை மற்றும் ஒருங்கிணைப்பின் அடிப்படையில் அமைவதை இது உறுதி செய்கிறது.

எனவே, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே அதிக அளவிலான ஒருங்கிணைப்பு இருப்பதுதான் இன்றைய காலத்தின் தேவையாகும். அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டுத் தவிர, மாநில அரசுகள் ஒன்றிய அரசுக்குக் கீழ்ப்பட்டவை அல்ல.

ஆகையால், ஆட்சியில் எந்த அரசியல் கட்சிகள் இருந்தாலும் பரவாயில்லை; மாநில அரசுகளுக்குச் சேர வேண்டிய உரிய மரியாதை மற்றும் அங்கீகாரம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஒன்றிய-மாநில உறவுகள் என்பது அரசியலமைப்பு சார்ந்த நிர்வாகத்தின் வரம்பிற்குள் வருவதால், மாறுபட்ட அரசியல் சித்தாந்தங்களையோ ஒதுக்கி வைக்க வேண்டும். ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் தனித்தனியே முன்னெடுக்கும் நலத்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் பலன்கள் குடிமக்களுக்குக் கிடைக்க வேண்டும்.

அதனால்தான், இந்திய அரசியலமைப்பானது 'கட்டமைப்பில் கூட்டாட்சித் தன்மையுடனும், உணர்வில் ஒற்றையாட்சித்தன்மையுடனும்' திகழ்கிறது என்று அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. ஒரு மாநிலத்தின் குடிமக்கள் மேம்பாட்டு விவகாரங்களில் பாகுபாட்டிற்கு உள்ளாக்கப்படக்கூடாது. ஒரு மாநிலத்தின் குடிமக்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் என்று வரும்போது, மாநிலங்களிடத்தில் தேர்ந்தெடுத்துச் செயல்படும் அணுகுமுறை இருக்கக்கூடாது. ஒரு நியாயமான அணுகுமுறையாக, சமத்துவம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அரசியல் செயல்முறைகளால் பாதிக்கப்படாமல் அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாத்தல் என்பது, நெருக்கடியான தருணங்களில் உரிமைகளைப் பாதுகாக்கும் பணியாக மட்டுமே பார்க்கப்படக்கூடாது; மாறாக, அது நிறுவனங்களின் அன்றாடச் செயல்பாடுகளிலும் சமமாகப் பொதிந்துள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

# ஜயேந்திர நகர் விநாயகர் கோவிலில் நடைபெற்ற சீதா ராம கல்யாண மகோற்சவம்

**ஏப்.06:** அன்பின் ஆதாரமான பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் தெய்வீக அருளாலும் ஆசீர்வாதங்களாலும், ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்புகள் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் சார்பில் 2026 ஏப்ரல் 5-ஆம் தேதி ஜயேந்திர நகர், ஹெரிடேஜ் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஜய விஜய பஞ்சமுக விநாயகர் கோவில் வளாகத்தில் ஸ்ரீ சீதா ராம கல்யாண மகோற்சவம் ஆன்மீக மகிழ்ச்சியுடன் சிறப்பாக நடைபெற்றது.

திருவிழா மகா பேரணியுடன் தொடங்கியது. இதில் அழகாக அலங்கரிக்கப்பட்ட பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா பிரும்மாண்ட படமும், ஸ்ரீ ராமர், சீதா மாதா, இலட்சுமணன், அஞ்சனேயர் விக்கிரகங்கள் ஆகியவற்றை, ஸ்ரீ சத்ய சாய் சமிதி, ஜயேந்திர நகர்-இலிருந்து, அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில், கோவிலை நோக்கி மிகுந்த பக்தி பூர்வமாக எடுத்துச் செல்லப்பட்டது. பேரணியில் பாலவிகாஸ் மாணவர்கள், மகிளா சேவாதள மற்றும் சேவாதள ஆண்கள் பங்கேற்று, பாரம்பரிய மங்கள வாத்தியம் ஒலிக்க, பக்தர்கள் முழுக்க வேத மந்திரங்கள் மற்றும் பஜனைகள் பாடி ஆன்மீக அலைபாய்ச்சலை உருவாக்கினர். கோவிலில் நடைபெற்ற ஸ்ரீ சீதா ராம கல்யாணம் மிகுந்த மரியாதையுடனும் வேத விதிகளுடனும் நடைபெற்றது. சுமார் 300-க்கும் மேற்பட்ட பக்தர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு தெய்வீக தம்பதிகளின் தெய்வீக கல்யாணத்தை தரிசிக்கப் பெற்றனர்.



நிகழ்வின் போது இசை நிகழ்ச்சிகளும் பக்தி பாடல்களும் சிறப்பாகஇடம்பெற்று சூழலை இன்னும் ஆன்மீகமயமாக்கின.



இறுதியில் மகா மங்கள ஹாரத்தி அர்ப்பணிக்கப்பட்டு, அனைத்து பக்தர்களுக்கும் மஹா பிரசாதம் மற்றும் தாம்பூலம் வழங்கப்பட்டு விழா நிறைவடைந்தது. பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா போதித்த அன்பு, சேவை, தர்மம் ஆகிய மதிப்புகளின் ஒளியில், இந்த நிகழ்ச்சி பக்தர்களின் மனதில் நிலை கொண்ட ஒரு தெய்வீக அனுபவமாக அமைந்தது.

# செங்கல்பட்டு புறவழிச் சாலையில் வாகன சோதனையின்போது பெங்களூரு தம்பதி காரில் 35 பவுன் நகை, ரூ.6 லட்சம் பறிமுதல்: பறக்கும் படை நடவடிக்கை

**செங்கல்பட்டு, ஏப்.06:** தமிழக சட்டமன்ற தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெறுவதை முன்னிட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளது. உரிய ஆவணங்கள் இன்றி அதிகளவு பணம், நகை அல்லது பரிசு பொருட்கள் கொண்டு வருவதை பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர் அதிரடி சோதனைகள் நடத்தி பறிமுதல் செய்து வருகின்றனர். இந்நிலையில், செங்கல்பட்டில் இருந்து காஞ்சிபுரம் செல்லும் புறவழிச் சாலையில் நேற்று மாலை பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்தனர். இதில், உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வந்த 35 பவுன் நகைகள், 10 கிராம் தங்க காசுகள், 50 கிராம்



எடையில் 2 வெள்ளி பிஸ்கட் மற்றும் ரூ.6 லட்சம் ரொக்க பணத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

பின்னர் காரில் வந்த தம்பதிகளிடம் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தினர். அவர்கள் கர்நாடகாவின் பெங்களூரை சேர்ந்த பிரகாஷ், அவரது மனைவி ஜோஷி என்பதும், மாமல்லபுரத்தில் நாளை நடைபெறும் உறவினர் வீட்டு விசேஷத்தில் பங்கேற்க வந்ததும் தெரியவந்தது. அவர்களிடம் நகைகள் மற்றும் ரொக்க பணத்துக்கான உரிய ஆவணங்களை சமர்ப்பித்துவிட்டு திரும்ப பெற்று கொள்ளலாம் என்று பறக்கும் படை அதிகாரிகள் தெரிவித்தனர். பின்னர் அவற்றை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்ததாக கூறப்படுகிறது. இதனால் அங்கு பரபரப்பு நிலவியது.

## அரசியல் கார்னர்

# "உங்கள் கோபத்தை ஆ.ராசா மீது காட்டுங்கள்" - ஸ்டாலினுக்கு பழனிசாமி பதில்

**சென்னை, ஏப்.06:** திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிமுக வேட்பாளர் எஸ்.ராமச்சந்திரன் (கீழ்பென்னாத்தூர்), வேலு(செங்கம்), அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி (கலசப்பாக்கம்), ஜெயசுதா(ஆரணி) முக்கூர் என்.சுப்பிரமணியன் (செய்யாறு), ராணி(வந்தவாசி) ஆகிய 6 தொகுதிகளில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்களையும் மற்றும் கூட்டணி கட்சிகளான பாஜக வேட்பாளர் சி.ஏழுமலை (திருவண்ணாமலை),, பாமக வேட்பாளர் பாஸ்கரன் (போளூர்) ஆகியோரை ஆதரித்து நேற்று ஆரணியில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது, அவர் பேசியதாவது: திருநெல்வேலி பொதுக்கூட்டத்தில் ஸ்டாலின் பேசும்போது, "எனக்கு உயிர் கொடுத்த கருணாநிதியை நான் வீட்டு சிறையில் வைத்திருந்ததாக நாக்கில் நரம்பில்லாமல் பழனிசாமி பேசுகிறார்" என்று சொல்லியிருக்கிறார். ஸ்டாலின் அவர்களே உங்கள் கோபத்தை என்னிடம் காட்டாதீர்கள். நான் பேசுவதை ஸ்டாலின் உற்று நோக்க வேண்டும். அந்த கோபத்தை உங்கள் கட்சியின் துணை பொதுச்செயலாளர் ஆர்.ராசாவிடம் காட்டுங்கள். கருணாநிதி வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டதாக ஆ.ராசாதான் கூறினார்.

அது இந்திய அளவில் வைரலானது. அதையேதான் நானும் வழிமொழிந்தேன். இதில் என் மீது கோபப்பட்டு என்ன பயன்? இதை ராசாவிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அவர்தான் கருணாநிதியை ஸ்டாலின் வீட்டுச் சிறையில் வைத்திருந்ததாக ஆடியோவில் பேசியிருக்கிறார். அதிமுக ஆட்சி வந்ததும் அந்த ஆடியோ குறித்து விசாரணை மேற்கொண்டு கருணாநிதியை வீட்டுச் சிறையில் வைத்திருந்ததாக கூறப்படுவது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

உங்களை ஆளாக்கி, பதவி கொடுத்த தந்தையையே சிறையில் அடைப்பது நியாயமா? கருணாநிதியின் மூத்த மகன் அழகிரியே இதைக் கூறுகிறார். ஸ்டாலின் பேசப் பேச இதில் உண்மை இருக்குமோ என்று மக்கள் சந்தேகிக்கின்றனர். சொந்தத் தந்தைக்கே இந்த நிலை என்றால், நாட்டு மக்களின் நிலை என்னவாகும் என்று சிந்தித்துப் பாருங்கள். அழகிரியை ஒதுக்கிவிட்டீர்கள், கனிமொழியை மாநில அரசியலுக்குள் வரவிடாமல் தடுத்துவிட்டீர்கள்

2021 பொதுத்தேர்தல் பிரச்சாரத்தின்போது பேசிய ஸ்டாலின், 'முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணம் குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்' என அறிவித்தார். இப்போது நான் கூறுகிறேன். முன்னாள் முதல்வர் கருணாநிதியை வீட்டு சிறையில் வைத்தவர்களை விசாரணை நடத்தி அவர்கள் மீது அதிமுக அரசு நடவடிக்கை எடுக்கும். துரைமுருகன் 2021ல் பிரச்சாரத்துக்கு செல்லும் போது,இது தான் நான் கடைசியாக போட்டியிடும் தேர்தல் வாக்களியுங்கள் என்றார். இந்த முறை என்ன கூறுகிறார்.இந்த முறை தேர்தலில் வெற்றி பெற்றால் இந்தியாவிலேயே அதிக முறை சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த பெருமை கிடைக்கும் என்கிறார். அவருக்கு 88 வயது ஆகிவிட்டது. அவரால் நடக்கவே முடியவில்லை, அவர் எப்படி மக்களை சந்தித்து குறைகளை தீர்ப்பார்.

நாம் ஆற்றை கடக்க தண்ணீருக்கு மேல் பாலம் கட்டுவோம். ஆனால்,இந்த மாவட்டத்தில் பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ.வேலு கட்டினபாலத்தை தண்ணீர் அடித்து சென்று விட்டது. அதிமுகஆட்சியில் 2 முறை விவசாயிகளின் 12 ஆயிரத்து 100 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் அதிமுக ஆட்சிஅமைந்ததும் விவசாய பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

காமராஜருக்கு ஒரு நீதி; கருணாநிதிக்கு ஒரு நீதியா?

பிரச்சாரத்தில் பழனிசாமி பேசும்போது, "கருணாநிதி இறந்தபோது அவர் உடலை மெரினாவில் அடக்கம் செய்ய நான் இடம் கொடுக்க மறுத்ததாக என் மீது ஸ்டாலின் களங்கம் சுமத்தியிருக்கிறார். எம்.ஜி.ஆர் மனைவி ஜானகி இறந்தார். அவரும் முதல்வராக இருந்தார். மெரினாவில் எம்.ஜி.ஆர். நினைவிடம் பக்கத்திலேயே அடக்கம் செய்ய இடம் கேட்டோம். முதல்வராக இருந்து இறந்தால்தான் இடம் கிடைக்கும். ராமாவரம் தோட்டத்திலேயே இடம் இருக்கிறது என்றீர்கள்.

அதற்கு முன்பே முதல்வராக இருந்த காமராஜர் இறந்தபோது அவரது உடலை அடக்கம் செய்ய கருணாநிதியிடம் மெரினாவில் இடம் கேட்டனர். முதல்வராக இருந்து இறந்தால்தான் மெரினாவில் இடம் கிடைக்கும். அதனால், கிண்டியில் இடம் கொடுக்கிறோம் என்றனர். கருணாநிதி மட்டும் யார்? அவர் இறந்தபோது முன்னாள் முதல்வர் தானே? கருணாநிதி என்ன முடிவை எடுத்தாரோ? அதே முடிவைத்தான் நானும் எடுத்தேன். காமராஜருக்கு ஒரு நியாயம்? கருணாநிதிக்கு ஒரு நியாயமா?" என்றார்.

# வாக்கு சேகரிக்கச் சென்ற அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனுக்கு எதிர்ப்பு: கிராம மக்கள் வாக்குவாதம்

**தூத்துக்குடி, ஏப்.06:** திருச்செந்தூர் அருகே கல் விளை கிராமத்தில் வாக்கு சேகரிக்கச் சென்ற அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனிடம், வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என குற்றம்சாட்டி பொதுமக்கள் கேள்வி கேட்டு எதிர்ப்பு தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அவர் திரும்பிச் சென்றார்.



சட்டப்பேரவைத் தேர்தலில் திருச்செந்தூர் தொகுதியில் திமுக சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட அமைச்சர் அனிதாராதாகிருஷ்ணன் 7-வது முறையாக போட்டியிடுகிறார். இதற்காக கடந்த 30-ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்த இவர், பிரச்சாரத்தை தொடங்கி ஒவ்வொரு ஊராகச் சென்று வாக்கு சேகரித்து வருகிறார்.

இதன் ஒருபகுதியாக உடன்குடி மேற்கு ஒன்றியம் செம்மறிகுளம் ஊராட்சி பகுதிகளான ராமசுப்பிரமணியபுரம், வலசைகிணறு, கல்விளை, பூலிகுடியிருப்பு, அணைத்தலை ஆகிய கிராமங்களுக்கு நேற்று காலை வாக்குசேகரிக்க, அனிதா ராதாகிருஷ்ணன் தனது ஆதரவாளர்களுடன் ஜீப்பில் சென்றார். ஒவ்வொரு கிரமாமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட அவர், பின்னர் கல்விளை கிராமத்துக்கு சென்றார். அப்போது, அங்கு திரண்டிருந்து பெண்கள் மற்றும் பொதுமக்கள் அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் அவர்கள் கூறும்போது, "இதற்கு முன்பு தேர்தல் வாக்குறுதியாக கொடுத்த அடிப்படை வசதிகளை எங்கள் கிராமத்தில் நிறைவேற்றித் தரவில்லை. கிராமத்தில் கோயில் கட்டுவதற்கு உதவியும் கேட்டோம். அதற்கும் உதவி செய்யவில்லை. இப்போது மட்டும் எதற்காக வாக்கு கேட்டு எங்கள் கிராமத்துக்கு வந்தீர்கள் என்று அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் அவரது ஆதரவாளர்களிடம் கேள்வி கேட்டு வாக்குவாதம் செய்தனர். அவர்களை சமாதானம் செய்ய முயன்ற நிலையில், வாக்குவாதம் தொடர்ந்ததால், அனிதா ராதாகிருஷ்ணன் வந்த வாகனம் அங்கிருந்து வேகமாக வெளியேறியது. இதனால் அங்கு

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: PAPERBOYNEWSPAPER@GMAIL.COM